REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜுன் 10 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
92
தினகரன்
வரு. 92 இல. 137 | Monday 10, June, 2024 | 16பக்கங்கள் | 50/-

## அமைச்சர் அலி சப்ரி நாளை ரஷ்யா பயணம்

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நாளை (11) ரஷ்யாவுக்கு பயணமாகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் நிஸ்னி நோவ்கோரோடில் நாளை நடைபெறவுள்ள பிரிக்ஸ் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர் ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார். Indian Ocean Rim Association அமைச்சர்கள் குழுவின் தற்போதைய தலைவர் 06

# இந்திய பிரதமராக மோடி பதவியேற்பு

## ஜனாதிபதி முன்னிலையில் 75 அமைச்சர்களும் சத்தியப் பிரமாணம்

### முன்னாள் அமைச்சர்கள் ஜெய்சங்கர், நிர்மலா சீத்தாராமன் உள்ளிட்டோருக்கும் அமைச்சுப் பதவிகள்

### ரணில் விக்கிரமசிங்க உட்பட உலகத் தலைவர்கள் பங்கேற்பு

### புதுடில்லி ஜனாதிபதி மாளிகை விழாக்கோலம்



இந்தியாவின் பிரதமராக மூன்றாவது தடவையாகவும் நரேந்திர மோடி நேற்றிரவு 7.15 மணியளவில் புதுடில்லி ஜனாதிபதி மாளிகையான ராஷ்டிரபதி பவனில் பதவி ஏற்றார். இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 06

# மாணவர்களின் பருவகால சீட்டை பாதுகாத்தது நானும் பந்துலவுமே

## அபிவிருத்தி பற்றி எவ்வளவு பேசினாலும் மக்கள் அதிகம் பயணிப்பது பஸ்களில்தான்



இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் மாணவர்களுக்கான பருவகால சீட்டுகள் வழங்குவதை அன்று இரத்து செய்ய முயற்சித்தபோது, நானும் அமைச்சர் பந்துலவும் நீதிமன்றத்துக்கு சென்றோம். இது மக்களுக்குச் சொந்தமானதென்றும் அதனைப் பாதுகாக்குமாறும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதனால், இலட்சக் கணக்கான மாணவர்களின் பருவகால சீட்டு வழங்கும் முறை பாதுகாக்கப்பட்டதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் வேலைத்திட்டமொன்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (09) அலரி மாளிகையில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர், "1957 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்துவதற்கு பண்டாரநாயக்கவின் தலைமையில் அரசாங்கத்தை அமைத்து, அந்த சட்டமூலத்தை பிலிப் குணவர்தன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அப்போது இலங்கை போக்குவரத்துச் 06

## கிரிக்கெட்டை தனிப்பட்டோரின் செல்வாக்கிலிருந்து விடுவிக்க துணிச்சலான அணுகுமுறை தேவை



இலங்கை கிரிக்கெட்டை தனிப்பட்ட நிறுவனமாக மாற்றியவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க துணிச்சலான அணுகுமுறை தேவையென, இலங்கை கிரிக்கெட்டின் நிலையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய நிலை தொடர்பில் 06

## நட்டத்தில் இயங்கிய இ.போ.ச. கடந்த வருடம் ரூபா 2,000 மில்லியன் இலாபம்

### அமைச்சர் பந்துலவின் காலமே பொற்காலம்



லோரன்ஸ் செல்வநாயகம்

திறைசேரியிலிருந்து நிதியைப் பெற்று தொடர்ச்சியாக இயங்கி வந்த இலங்கை போக்குவரத்து சபையானது, வரலாற்றில் முதல் தடவையாக கடந்த வருடத்தில் இலாபமீட்டி திறைசேரிக்கு நிதி வழங்கியுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். இலங்கை போக்குவரத்து சபை கடந்த வருடத்தில் 2000 06

## இன்னும் இரண்டு வாரங்களில்

## நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய சக்தி வாய்ந்த அரசியல் கூட்டணி



நாட்டைக் கட்டியெழுப்பும் வரலாற்றில் மிகவும் சக்தி வாய்ந்த அரசியல் கூட்டணியை, இன்னும் இரண்டு வாரங்களில் அனைவரும் அறிந்து கொள்ள முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளர் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் பரந்த அரசியல் கூட்டணியின் கீழ் 06

## 2025 முதல் மூன்றாண்டுகளுக்கு

## ஐ.நா. பொருளாதார, சமூக சபைக்கு இலங்கை தெரிவு

### 189 நாடுகளில் இலங்கைக்கு 182 ஆதரவு

ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு இலங்கை தெரிவாகியுள்ளது.

நியூயோர்க்கில் கடந்த 07 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தில் இலங்கை 2025 ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மூன்றாண்டு காலத்துக்கு ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 189 நாடுகளில் இலங்கைக்கு ஆதரவாக 182 வாக்குகவாக்குகள் கிடைத்தன. வாக்களிப்பில் பிராந்திய ரீதியில் ஆகக் கூடுதலான வாக்குகள் இலங்கைக்கு கிடைத்தது. இது, மொத்த வாக்குகளில் 07 ஆவது அதிக வாக்குகளாகப் பதிவாகியுள்ளது.

இலங்கை இதற்கு முன்னர் 1985 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரையும் 2006 முதல் 2008 வரையிலான காலப்பகுதிக்குமாக இந்த பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. 06



## 03 நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் இரண்டு வாரத்தில் சமர்ப்பிப்பு

## வேலை நிறுத்தம் செய்வதற்கு இது சரியான தருணம் அல்ல

### அரச அதிகாரிகள் புரிந்து செயற்பட வேண்டும்



நாட்டில் வேலைநிறுத்தம் செய்வதற்கு இது சரியான தருணமல்ல. அரச அதிகாரிகள் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயற்படுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் பல்வேறு சம்பள முரண்பாடுகள் உருவாகியுள்ளன. ஒழுங்குமுறையில் சம்பள ஏற்பாடுகள் செய்யாததாலும், பல்வேறு 06

## கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பிக்க புதிய அடையாள அட்டை அவசியம்

புதிய தேசிய அடையாள அட்டைஇல்லாத விண்ணப்பதாரர்களுக்கு கடவுச்சீட்டுகள் வழங்குவதில்லையென குடிவரவு,குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளதாக கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் குறிப்பிட்ட அவர்: கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் பல தசாப்தங்கள் பழமையான, தேசிய அடையாள அட்டைகளையே வைத்திருப்பதாக அறியப்படுகிறது. கடவுச்சீட்டைப் பெறத் தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் வர்ண புகைப்படத்துடன் பழைய தேசிய அடையாள அட்டை புகைப்படங்கள் பெரிதும் வேறுபடுகிறன .

பழைய தேசிய அடையாள அட்டைகள் எண்கள் கூட தெரியாத அளவுக்கு சிதைந்துள்ளதால், இந்த நடைமுறை குடிவரவு மற்றும் குடியகல்வு 06

## SLFP தலைமையிலான கூட்டணி தீர்மானிக்கும் சக்தியாக அமையும்

### கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் இனிவரும் தேர்தல்களில் தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி திகழுமென , கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சவால்களை வெற்றி கொண்டவர்கள் நாம் என்பதால், கூட்டணி அமைக்கக்கூடிய சிறந்த திறமை எமக்குள்ளது. 06

## 2025 வரவு–செலவு திட்டத்துக்கு பதில் இடைக்கால நிதி ஒதுக்கீடு



லோரன்ஸ் செல்வநாயகம்

2025, வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டதென நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்துக்கு பதிலாக இடைக்கால நிதி ஒதுக்கீடு ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து 06

## வாகனங்கள் இறக்குமதி: 04 கட்டங்களாக அனுமதி

### அக்டோபர் மாதம் முதல் ஆரம்பம்



வாகன இறக்குமதி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதிகள் பல கட்டங்களின் கீழ் வழங்கப்படும். இதன்படி ஒக்டோபர் மாதம் 06

## சைப்பிரஸ் அனுப்புவதாக கூறி பணமோசடி செய்த பெண் கைது



சைப்ரஸில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பெண்ணொருவர் சிலாபம், பிங்கிரிய பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர்.

சைப்ரஸில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்புக்கு அனுப்புவதாகக் கூறி சிலாபத்திலுள்ள இப் பெண், 04 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாலேயே கைதுசெய்யப்பட்டார். 06

## பஸ் வண்டி விபத்தில் 13 மாணவர்கள் காயம்

லோரன்ஸ் செல்வநாயகம்



பாடசாலை மாணவர்கள் பயணித்த பஸ் வண்டி விபத்துக்குள்ளானதில் 13 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வரக்காப்பொளை பிரதேசத்தில் 06

## 'யுக்திய':167 நாட்களில் 200 கிலோ ஹெரோயின் மீட்பு

'யுக்திய' விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட கடந்த 167 நாட்களில் 200 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 5.434 பில்லியன் ரூபாவாகும்.

போதைப்பொருளுடன் தொடர்புள்ள நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடந்த வருடம் டிசம்பர் மாதம் நாடளாவிய ரீதியில், பொலிஸார் இந்த விசேட நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

## நகர்வலம்



# ஐ.தே.க.வின் பாணந்துறைக்கான புதிய அமைப்பாளர் நியமனம்

***பாணந்துறை மத்திய மத்திய குறுப் நிருபர்***

ஐக்கிய தேசிய கட்சியின் பாணந்துறைக்கான அமைப்பாளராக முன்னாள் பாணந்துறை நகராட்சி மன்ற உறுப்பினர் ஜானக சொய்சா விக்கிரமசிங்க நியமனம் பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.




கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன, அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பிரித்தானிய உயர் ஸ்தானிகரை சந்தித்த மு.கா தலைவர் ஹக்கீம்

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் (Andrew Patrick)மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை, கொழும்பு 7 இல் உள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் விறுவிறுப்பான அரசியல் சூழ்நிலை, தற்போதைய களநிலவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உயர்ஸ்தானிகர் பெட்ரிக் அண்மையில்தான் இலங்கைக்கான பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகராகக் கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.



# "சங்கே முழங்கு" மாபெரும் பேச்சுப்போட்டி

"சங்கே முழங்கு" எனும் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான மாபெரும் பேச்சுப்போட்டி இந்த மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை மலேசியாவின் மாசாய் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில், இறையனார் செந்தமிழ் மறவர் அ.ஆ.தமிழ்த்திருவின் 50ஆம் ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நடைபெறுகிறது.

உலகச் சாதனை நிகழ்ச்சியாக நடைபெறும் இப்பேச்சுப்போட்டியை, மலேசிய ஆசிரியையும் ருத்ரன் நடனக்குழுவின் நிறுவனத் தலைவருமான தனலெட்சுமி இராஜேந்திரன் தமிழ்த்திரு ஏற்பாடு செய்கின்றார். மசாய் சுப்பிரமணியர் ஆலயம் மற்றும் தில்லி கலை இலக்கியப் பேரவை, இந்தியா என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்கின்றன.



இந்நிகழ்ச்சியில் மலேசிய தமிழ்ப் பள்ளி மாணவர்களும் தமிழ் ஆன்றோர்களும் சான்றோர்களும் மத்தியபிரதேசம் போபாலிருந்து சிறப்பு அழைப்பாளர்களாக நளினி குமாரும் கீதா சங்கர் நைஜிரியாவிலிருந்தும், C.P.கண்ணன் மற்றும் அவரது துணைவியார் சாந்தி கண்ணன், முனைவர் மோ.பாட்டழகன் இயக்குநர், கவிஞர் டாக்டர் ஆலந்தூர் மோகனரங்கம், தமிழியல் ஆய்வு மையம்,சென்னை மற்றும் அவரது துணைவியார் திருமதி.பி.சங்கமித்திரை, ஆசிரியர் இளவரசி மாத இதழ், சென்னை, மற்றும் கவிஞர் பி.எஸ்.அகிலன், வழக்கறிஞர் சென்னை உயர் நீதி மன்றம், எழுத்தாளர் எம்.வெற்றியரசி, பதிப்பாளர், குயிலோசை, சென்னை, மற்றும் இந்நிகழ்ச்சியை இந்தியாவிலிருந்து ஒருங்கிணைக்கும் சிறப்பு அழைப்பாளராக தில்லி பா.குமார் கலந்து சிறப்பிக்கிறார்.

# மாத்தறை மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

***வெலிகம தினகரன் நிருபர்***

மழையுடனான கால நிலையைத் தொடர்ந்து மாத்தறை மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர். டெங்கு நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்த பொதுமக்களின் உதவி மிகவும் அவசியம், என அவர்கள் தெரிவிக்கின்றனர். டெங்கு கட்டுப்பாட்டின் போது வீடுகளில் மாத்திரம் இன்றி அலுவலகங்கள், பாடசாலைகள், மற்றும் மதஸ்தலங்கள் அனைத்தும் சுத்தம் செய்யப்படல் வேண்டும். எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனம் கண்டு உடனுக்குடன் அவற்றை அகற்றி விட வேண்டும். காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று உடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும், தேவைப்படின் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

டெங்கு நோய் எனத் தெரிய வந்தால், கூடுதலான ஓய்வைப் பெற்றுக் கொள்வது சிறப்புடையது. சோர்வு, வாந்தி, வயிற்று வலி, தலைவலி, மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதை டெங்கு நோயாக கருதி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## காயல் ஏ ஆர் ஷேக் முகமதுவின் 15ஆவது ஆண்டு நினைவு தினம்

ஈச்சை மரத்து இன்பச் சோலையில் என்ற உலகம் எங்கும் புகழ் பெற்ற பாடலை பாடிய சங்க நாத செம்மல் அருள் இசை குரலோன் காயல் ஏ ஆர் ஷேக் முகமதுவின் 15ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஜூன் 9ஆம் திகதியாகும். 1350 இஸ்லாமிய பாடல்களையும் 20க்கும் மேற்பட்ட சினிமா பாடல்களையும், 50க்கும் மேற்பட்ட சமத்துவ தத்துவ பாடல்களையும் பாடியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது



## பிரபல எழுத்தாளர் சுலைமா ஏ சமி காலமானார்

***பேருவளை விசேட நிருபர்***

தர்காநகர், மிஹிரிபென்னையை பிறப்பிடமாகக் கொண்ட நாடறிந்த பிரபல எழுத்தாளர் சுலைமா ஏ சமி அவர்கள் கடந்த வெள்ளியன்று காலமானார். அவர், காலம்சென்றவர்களான அப்துல் சமி உம்மு தமீமா தம்பதியின் புதல்வியாவார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் சனிக்கிழமை (08) அன்று மாவனல்லை கிரிங்கதெனிய ஜும்மா மஸ்ஜித் மையவாடியில் நடைபெற்றதோடு, அன்னாரின் குடும்பத்தினர், தர்காநகர் ஊர் மக்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இன்னும் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் பொது வேட்பாளர்;

# வரலாறு கற்றுத்தந்த வீணான முயற்சிகள்



தமிழ் தேசிய பணி சபை தலைவர் முன்னாள் பொதுச் செயலாளர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கலாநிதி நல்லையா குமரகுருபரன் .

தனி தமிழ் வேட்பாளர், தேர்தல் பகிஷ்கரிப்பு என்பன எதிர்கால பேரம்பேசும் வல்லமையை இழக்கச்செய்யும். அதனை விடவும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களிக்கத் தவறினால் எமது சுய நிர்ணய உரிமையை நாமே நிராகரித்ததாக அமையும்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ தேசிய கட்சிகளூடாகத்தான் ஒரு ஜனாதிபதி தெரிவாகப் போகின்றார். ஆதலின் எமது தனி தமிழ் வேட்பாளரை அவர்கள் பெரிது படுத்த வேண்டிய தேவை இல்லை. தேர்தலை பகிஷ்பரிப்பதன் மூலம் நமக்கான உரிமையை நாமே இழக்க தயாரானவர்களாகின்றோம்.

நாமும் வல்லமையுள்ள மக்கள் பிரதிநிதிகள் இதற்காக ஒன்றுபட்டு தேசிய வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள். சுமந்திரன், விக்னேஸ்வரன், சித்தார்த்தன் செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் இதனை முன்னெடுக்க வல்லவர்களே. பழக்கப்பட்ட செத்த பாம்பை அடிக்கும் செயல்களுக்காக காலம் கடத்துவது வீணான செயல்.

## மலைச்சாரல்



நீரில் இறங்க வேண்டாம்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் வேண்டுகோள்

***இரத்தினபுரி சுழற்சி நிருபர்***

தேங்கி இருக்கும் வெள்ள நீர் முற்றாக வடிந்து செல்லும் வரை வெள்ள நீரில் அல்லது சேற்று நிலங்களில் இறங்க வேண்டாம் என பொதுச் சுகாதார சேவை அதிகாரிகள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரத்தினபுரி பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்படி அறிவுறுத்தல்கள் பொதுச் சுகாதார சேவை அதிகாரிகள், தொற்று நோய் விசேட செயலணி பொலிஸ் அதிகாரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.அத்துடன் வெள்ளம் வடிந்து செல்வதுடன் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம், டெங்கு, போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதால் இப்பகுதியில் நீரில் இறங்கி எந் த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் எனவும் பிரதேச மக்கள் எச்சரிக்கப்பட்டு வருகின்றனர்.

வெள்ளம் வடிந்ததும்

# துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் இரத்தினபுரி மாநகர சபை

***பலாங்கொடை தினகரன் நிருபர்***

இரத்தினபுரி நகரில் வெள்ளம் வடிந்ததும் நீ ரில் அமிழ்ந்த வீதிகளைச் சுத்தம் செய்தல், மண் சரிவு ஏற்பட்ட இடங்களில் மண்ணை அகற்றுதல், வீடுகளில் கிணறுகளை சுத்தம் செய்தல் உட்பட மேலும் பல பணிகளை இரத்தினபுரி மாநகர சபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இரத்தினபுரி மாநகர சபையின் ஆணையாளர் அருண பேமரத்னவின் ஆலோசனைப்படி நகர சபை ஊழியர்கள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட மறுநாள் முதல் தங்களது கடமைகளை செய்துள்ளனர். இரத்தினபுரி நகரின் பல பகுதிகள் இவ் ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டன.

வெள்ளப்பெருக்கின் பின்னர் வீடுகளை சுத்தம் செய்து பாதைகளில் கொட்டப்படும் குப்பைகளை அகற்றியதோடு, வெள்ளப்பெருக்கின் பின்னர் ஏற்படும் நோய்கள் பரவுவதை தடுப்பதற்கும் மருந்து வகைகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளும் இரத்தினபுரி மாநகர சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பொய்யான முறைப்பாடு பதிவுசெய்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

***இரத்தினபுரி சுழற்சி நிருபர்***

பொய்யான முறைப்பாடு பதிவு செய்ததாகக் ஆறு பொ லிஸ் உத்தியோகத்தர்ககள் மீது எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தனது வீட்டுக்கு பின்னால் வடிகானில் துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருப்பதாகப் பொய்யான முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய காவன் திஸ்ஸபுர

பிரதேசத்தில் வசிக்கும் ஹர்ஷ நுவான் சதுரங்க என்பவர் தொடர்ந்த இவ்வழக்கு விசாரணை நேற்று முன் தினம் நடைபெற்றது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலைய த்தில் கடமையாற்றும் இந்தப் பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கையால் தான் பெரும் உளரீதியாக பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ளதாக தனது சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இவ் வழக்கின் அடுத்த விசாரணை ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறும் என நீதவான் திலும் பிரணாந்து விசாரணை முடிவில் அறிவித்தார்.

# உணவகங்களில் திடீர் பரிசோதனை



***தலவாக்கலை குறுப் நிருபர்***

தலவாக்கலை லிந்துலை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நகரங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள கடைகள் மற்றும் உணவகங்களை பொது சுகாதார அதிகாரிகள் குழுவொன்று நேற்று (9) திடீர் சோதனை செய்தது. லிந்துலை, மெராயா, இல்டன்ஹோல், நாகசேனை, ஹோல்புறுக், மன்ராசி, அக்கரப்பத்தனை, டயகம போன்ற நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் உணவகங்கள், பேக்கரிகள், கேன்டீன்கள், கடைகள் போன்றன கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் பல வர்த்தக நிலையங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டன. பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்பனை செய்த 38 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் பழுதடைந்த நுகர்வு பொருட்களை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெய்ஷினி தலைமையில் ஹங்குரான்கெத்த, மத்துரட்ட, வலப்பனை, நுவரெலியா, கொத்மலை, கொட்டகலை, அம்பகமுவ, பொகவந்தலாவ, மஸ்கெலியா மற்றும் நவ திஸ்பனை ஆகிய பிரதேசங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பணிபுரியும் 35 பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் நிர்வாக பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் ஒருங்கிணைந்து இந்த சோதனைகளை மேற்கொண்டனர்.

## கந்தப்பளை பஸ் விபத்து ஒருவருக்கு பலத்த காயம்

நுவரெலியா கந்தப்பளை நகரில் நேற்று முன்தினம் (08) மாலை இடம் பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கவலைக்கிடமாகிய நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவசர சிகிச்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கந்தப்பளை பொலிசார் தெரிவித்தனர். இந்த பஸ் விபத்தில் கந்தப்பளை கொங்கோடியா கீழ் பிரிவைச் சேர்ந்த கந்தையா சந்திரகுமார் வயது 42 என்ற நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாகவும் அவரை உடனடியாக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.அதே நேரத்தில் விபத்துக்குள்ளான பஸ் மட்டும் பஸ்சின் சாரதியை கந்தப்பளை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தப்பளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆ.ரமேஸ்.**

## 427 புள்ளிகளைப் பெற்ற கதீஜா இல்லம் முதலாம் இடம்

***அக்குறணை குறுப் நிருபர்***

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் 427 புள்ளிகளைப் பெற்று கதீஜா இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கண்டி போகம்பறை விளையாட்டு மைதானத்தில் அதன் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் நடைபெற்றது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுன் 10 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.31
லுஹர் - 12.11
அஸர் - 03.38
மஃரிப் - 06.25
இஷா - 07.42

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 28
ராகுகாலம் : காலை : 7.22 - 8.52வரை
சுபநேரம் : காலை : 11.52 - 1.22வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# ஜனாதிபதிக்கு இந்தியாவில் நேற்று அமோக வரவேற்பு

மூன்றாவது முறையாகவும் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவில் பங்கேற்கச்சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) காலை இந்திரா காந்தி விமான நிலையத்தினூடாக இந்தியா சென்றடைந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் சார்பில் மேலதிக செயலாளர் பி.குமரன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர வலய மேலதிக செயலாளர் புனித் அகர்வால், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷெனுகா செனவிரத்ன ஆகியோர் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளித்தனர். விமான நிலையத்தில் இந்திய கலாசாரத்தை பிரதிபலிக்கும் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன, அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் இணைந்துள்ளனர்.








# அரசாங்கத்தின் பயணத்தை மாற்ற முயற்சித்தால் நாட்டை மீள கட்டியெழுப்ப முடியாத நிலையே உருவாகும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசாங்கத்தின் தற்போதைய பயணத்தை மாற்ற முயற்சித்தால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாத. நிலையே உருவாகும் என, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். அந்த வகையில் இனி வரும் யுகத்தில் பொருட்களின் விலைகள் குறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணியின் முதலாவது கூட்டம் அம்பலாந்தொட்டையில் நடைபெற்றது.

அகூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

21 அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நாம், இப்புதிய கூட்டணியை ஆரம்பித்துள்ளோம். மக்களுடன் கலந்துரையாடியே அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளோம். இவ்வாறானஎந்த தீர்மானங்கள் பிழைத்ததில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி வகிக்கும் போது கட்சியில் 140 பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்பட்டனர். அவர் அதனை இரண்டு பேராக குறைத்துள்ளார்.

ஆனால், இப்போது எமது புதிய கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி உட்பட வேறு கட்சிகளிலிருந்தும் வந்து இணைகின்றனர்.

இப்புதிய கூட்டணியின் மக்கள் கூட்டம் நடத்தப்படுவதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்தைக் காண்பிப்பதற்காகவே.கடந்த இரண்டு வருடங்களுக்கு முன், நாடு இருந்த நிலையை மக்கள் நன்கு அறிவர். எரிபொருள் வரிசைகளிலும் சமையல் எரிவாயு வரிசைகளிலும் நின்று மக்கள் உயிரிழந்தனர். நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

குறைந்தபட்சம் மருந்துகளை கொள்வனவு செய்யவும் முடியாமல் இருந்தது.இதற்கான நிதி திறைசேரியில் இருக்கவில்லை. 50 மில்லியன் டொலரை தேடிக்கொள்ள முடியாமல் துறைமுகத்துக்கு வந்த எரிபொருள் கப்பல் திரும்பிச் சென்றது.

விவசாயிகளுக்கு உரம் கிடையாது வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். .பெற்றோல் செட்களில் வாரக் கணக்கில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார் .நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

அந்த வகையில் நாம் ஒத்துழைப்பு வழங்கிய ரணில் விக்ரமசிங்க, தற்போது நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இப்பொழுது முன்னெடுத்துச் செல்லும் பயணத்தை மாற்றினால் மீண்டும் நாடு மீள கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு வீழ்ச்சி யடையும். இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடைபெறும். அந்த வகையில் நாட்டில் நிலவும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியினாலோ முடியாது.

# பாராளுமன்ற செயலாளர்கள் அதிகாரிகளுக்கான செயலமர்வு

## சபாநாயகர் தலைமையில் நாளைஏற்பாடு

பாராளுமன்றங்களின் செயலாளர் நாயகங்கள் மற்றும் அதிகாரிகளுக்காகப் பொதுநலவாய பாராளுமன்ற சங்கம் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தலைமைத்துவம் தொடர்பான வதிவிட செயலமர்வு இன்று (10) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பி.ப 2.00 மணிக்கு பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பொதுநலவாய பாராளுமன்ற சங்க தலைமையகத்தின் நிகழ்ச்சித்திட்டத் தலைவர் மத்தியூவ் சலிக் உள்ளிட்ட, பாராளுமன்றங்களின் செயலாளர் நாயகங்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கைப் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இவ்வதிவிட செயலமர்வு இம்மாதம் 10 முதல் 14 வரை கொழும்பில் நடைபெறும்.

# ஒழுக்காற்று நடவடிக்கைகளை எதிர்கொள்ள தயாராக உள்ளேன்



ஒழுக்காற்று நடவடிக்கைகளை எதிர்கொள்ளத் தயாராக உள்ளதாக அமைச்சர் விஜயதாசராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமைச்சர் விஜயதாசவுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. அக்கட்சியின் தலைவர் சாகலகாரியவசம் இதுபற்றி அறிவித்துள்ளார். இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர்:

எந்தவொரு அரசியல் கட்சியும் தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டாலும் அதனை எதிர்கொள்ள தயார். நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு (Wijeyadasa Rajapakshe) எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச நியமிக்கப்பட்டமை, அப்பதவியை அவர் ஏற்றுக்கொண்டது பற்றியே இவர் விசாரிக்கப்படவுள்ளார். இந்த விடயம் தொடர்பான அறிவித்தல் ஒழுக்காற்று சபைக்கு அனுப்பப்பட்டதாகவும் ஒழுக்காற்று சபையின் அறிக்கை தற்போது கட்சிக்கு கிடைத்துள்ளதாகவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்ணின் வயிற்றிலிருந்து கொகெய்ன் உருண்டைகள் மீட்பு



கொகெய்ன் ரக போதைப் பொருளை உருண்டைகளாக தயார் செய்து விழுங்கிய, உகண்டா பிரஜையொருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

உகண்டா பிரஜையான இப்பெண் கொகெய்ன் போதைப் பொருளை விழுங்கி வயிற்றில் வைத்து, சூசகமாக நாட்டுக்கு எடுத்து வந்துள்ளதார். விமான நிலைய விசேட ஸ்கேன் இயந்திரமூலம் இது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

31 வயதான இப்பெண், கொகெய்ன் போதைப்பொருளை விழுங்கியவாறு கட்டாரிலிருந்து நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

சந்தேக நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்பின்னர் 14 கொக்கெய்ன் உருண்டைகள் அவரது வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டன.

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை ஜூன் 30ஆம் திகதி திறக்கப்படும்! உகந்தையில் இறுதித் தீர்மானம்!





காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாத யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 30ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூலை 11 ஆம் திகதி மூடப்படும் .

முன்னர் இப் பாதை திறக்கப்படும் திகதி ஜூலை 1 ஆம் திகதி என மொனராகலையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பின்னர் லாகுகல பிரதேச செயலகத்தினால் அது ஜூலை 2 ஆம் திகதி என கூட்டத்தில் கூறப்பட்டது.

இதனை காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உதவிக் கல்விப் பணிப்பாளர் விரி.சகாதேவராஜா ஆகியோர் சபையில் எழுந்து இக்காலம் அறவே போதாது.அது ஒரிருநாள் முந்தி மாற்றப்படவேண்டும். யாத்திரீகர்களின் நலன்கள் கட்டாயம் பேணப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். அதன் பலனாக அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர்களும் அந்த இடத்தில் கலந்துரையாடி இத் திகதி இம் மாதம் 30 ஆம் திகதியாக மாற்றப் பட்டது. கடந்த (7) வெள்ளிக்கிழமை உகந்த மலை முருகன் ஆலயத்தின் காரைதீவு மடத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# மேல் மாகாண வீடமைப்பு திட்ட உதவித் தொகை அதிகரிப்பு

## ஆளுநர் ரொஷான் குணதிலக்க அறிவிப்பு

குறைந்த வருமானம் பெறுவோருக்கு மேல் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தின் கீழ் வழங்கப்படும் வீடமைப்பு உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்கவின் பணிப்புரைக்கமைய இத்தொகை அதிகரிக்கப் பட்டுள்ளது. புதிய வீடு கட்டுவதற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அதிகபட்சம் இரண்டு இலட்சம் ரூபா, மூன்று இலட்சம் ரூபாவாகவும், ஏற்கனவே உள்ள வீட்டை மேம்படுத்தவோ அல்லது மீதமுள்ள பணிகளை முடிக்கவோ இதுவரை வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா, இரண்டு இலட்சமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வருமென வர்த்தமானி அறிவித்தலையும் ஆளுநர் வெளியிட்டுள்ளார்.

**பொது அறிவித்தல்**

நுகேகொட
ஹைலெவல் வீதி
இல. 191/A, என்ற
இடத்தில் இல. PV
82737 எனும் ரனாரா
இன்வெஸ்ட்மன்ட்
சர்விசஸ் (பிரைவட்)
லிமிட்டட் இன் கீழ்
நடத்திச் செல்லப்பட்ட
அடகு வியாபாரம்
2023.10.01 முதல்
இல. WDE 000 886
ரனாரா ஜுவல்லர்ஸ்
என்ற பெயரில் அந்த
இடத்திலேயே நடத்திச்
செல்லப்படுவதாக
சகல வாடிக்கையாளர்
களுக்கும் இத்தால்
தெரிவித்துக்
கொள்கிறேன்.

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இரண்டு வாரத்தில் சமர்ப்பிப்பு



நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்துக்கான திருத்தங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர் சட்டம் கடந்த இருபது வருடங்களாக திருத்தம் செய்யப்படவில்லை. தற்போதுள்ள சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், தற்போது சட்ட மாஅதிபரின் கவனத்துக்கு இது அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

06

# பிரதமர் நரேந்திர மோடிக்கு கிழக்கு ஆளுநர் வாழ்த்து



இந்தியாவின் மக்களைவை தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையும் ஆட்சி அமைத்துள்ளமைக்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் இந்திய மக்களுக்காக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டுள்ளன. இந்தியாவை பொருளாதார ரீதியில் வலுவான ஒருநாடாக கட்டி அமைத்துள்ளார். அதே போல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்திய அரசு கடன் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி இலங்கைக்கு கைக் கொடுத்துள்ளது. மேலும் வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

06






தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 03

### குறள் தரும் சிந்தனை

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, அகம் குளிர்ந்து ஒன்றைக் கொடுப்பதை விட மேலான பண்பாகும்.

## ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் வதந்தி பரப்பும் முயற்சி

நாட்டில் இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. அதேநேரம் நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் தேர்தலை இலக்காகக் கொண்டு நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகள் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் வதந்திகளைப் பரப்பியுள்ளனர். இதன் ஊடாக மக்களை தவறான வழியில் இட்டுச் செல்ல அவர்கள் எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது. அதுவே மக்களின் அபிப்பிராயமும் ஆகும்.

அதேநேரம் தேர்தலை எதிர்கொள்ளத் திராணியற்றவர்கள்தான் இவ்வாறான வதந்திகளைப் பரப்புவர். அதுவே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

இந்நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்கும் அரசியலமைப்பு, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அதாவது தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அதில் உள்ளடங்கியுள்ளன. அதனால் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படும். அரசியலமைப்புக்கு ஏற்ப செயற்படுவது அவசியம். அது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பும் கடமையும் ஆகும். அரசியலமைப்பை மீறி செயற்பட முடியாது.

அவ்வாறிருக்கையில், தேர்தல் நடத்தப்படுவது குறித்து சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையில் வதந்திகளைப் பரப்புவதன் மூலம் அற்ப அரசியல் இலாபம் அடைந்து கொள்ளலாம் என சிலர் எதிர்ப்பதாகவே கருதப்படுகிறது. ஆனால் அந்த வதந்திகளின் உண்மைத் தன்மையையும் அதனைப் பரப்புபவர்களையும் மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

தற்போது தேர்தலுக்கான ஏற்பாடுகள் வெளிப்படையாகவே இடம்பெற்று வருகின்றன. அதேநேரம் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் அத்தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆயத்தப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளன. இந்தச் சூழலில் தேர்தல் நடத்தப்படுவது குறித்து சந்தேகம் எழுப்பி அற்ப அரசியல் இலாபம் பெற முடியும் என எதிர்பார்ப்பது பகற்கனவாகவே அமையும்.

அந்த வகையில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் பிரதமர் தினேஷ் குணவர்தனவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அச்சந்திப்பின் போது பிரதமர், 'நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெறும். சுதந்திரம் மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் இந்த அறிவிப்பு, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. எதிரணியைச் சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகள் பரப்பும் வதந்திகள் எவ்வித அடிப்படையும் அற்றவை என்பதை இது தெளிவாக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் தேர்தலை நடத்தாதிருப்பதற்கான தேவை யாருக்குள்ளது என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, இந்நாடு முன்னொரு போதும் இல்லாத வகையில் கடும் பொருளாதார வீழச்சிக்கு உள்ளாகி, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் நம்பிக்கை தரும் வகையில் பிரவேசித்திருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாகவே அந்த வீழ்ச்சியில் இருந்து குறுகிய காலப்பகுதியில் நாட்டினால் மீட்சி பெற முடிந்ததாக இருந்தது.

இந்நாடு எதிர்கொண்டது போன்ற பொருளாதார நெருக்கடிக்கு உலகின் பல நாடுகள் ஏற்கனவே முகம்கொடுத்துள்ளன. அந்நாடுகள் மீட்சி பெறவென எட்டு முதல் பத்து வருடங்கள் சென்றுள்ளன. ஆனால் இலங்கை அவ்வாறான நிலைமையை எதிர்கொள்ளவில்லை. நாடு குறுகிய காலப்பகுதிக்குள் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்றதோடு, இயல்பு நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரமும் நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில் நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தேவையும் பரவலாக உணரப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருளாதார ரீதியில் ஒரு முக்கியமான காலகட்டத்தை நாடு கடந்து கொண்டிருக்கிறது. இச்சமயம் மக்கள் ஆணை இன்றியமையாததாகும். ஜனநாயக நாடொன்றில் அந்த ஆணையைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் மிகவும் முக்கியமானது. அதனால் தேர்தல் நடத்தப்படுவது மிகவும் அவசியமானது. அதனையே பிரதமர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஆகவே தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் வதந்திகளைப் பரப்பி ஒரு போதும் அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ள முடியாது என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பிரதமராக நரேந்திர மோடி நேற்று பதவிப்பிரமாணம்



### அயல்நாட்டுத் தலைவர்கள் பங்கேற்பு; ராஷ்டிரபதி பவனில் மாபெரும் விழா

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி நேற்று மாலை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். மூன்றாவது முறையாக அவர் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். மோடியின் பதவியேற்பு விழா நேற்றிரவு 7.15 மணியளவில் ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது. இந்த விழாவில் அண்டை நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவு ஜனாதிபதி டொக்டர் முகமது முய்சு, சீஷெல்ஸின் துணைத் தலைவர் அகமது அஃபிஃப், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹல் பிரசந்தா, பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே உட்பட பலர் பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா முதல் சிறப்பு விருந்தினராக நேற்றுமுன் தினமே டெல்லிக்கு வருகை தந்திருந்தார். அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

டெல்லியில் நேற்று மாலை நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஆட்சியமைத்துக் கொண்டது. இந்தப் பெரும் விழாவை முன்னிட்டு, டெல்லியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் போக்குவரத்து பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு, ராஷ்ட்ரபதி பவன் அமைந்திருக்கும் பகுதியில் பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, போக்குவரத்து முடக்கப்பட்டது. அதற்கு முன்னதாக பிரதமர் மோடி டெல்லி ராஜ்காட்டில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் நினைவிடத்துக்குச் சென்று மரியாதை செலுத்தினார்.

மத்தியில் தனிப்பெரும்பான்மையுடன் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி செய்துவந்த பா.ஜ.க, இம்முறை தனிப்பெரும்பான்மை கிடைக்காமல் போகவே, தெலுங்கு தேசம் மற்றும் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட என்.டி.ஏ கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. இந்தத் தேர்தலில் 543 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க 240 இடங்களில் வெற்றிபெற்றது. அதேபோல அந்தக் கட்சியின் தலைமையிலான கூட்டணி 293 இடங்களில் வெற்றிபெற்றது.

பா.ஜ.க ஆட்சி அரியணையில் அமர்வதற்கு முக்கிய பங்காற்றிய டி.டி.பி, ஜே.டி.யூ மற்றும் இதர கூட்டணிக் கட்சிகளுக்கும் அமைச்சரவையில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 7:15 மணிக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, மோடிக்கு பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பும் செய்து வைத்தார். மோடியைத் தொடர்ந்து அமைச்சரவையில் இடம்பெறும் பிறரும் பதவி ஏற்றுக் கொண்டார்கள்.

பதவியேற்பு விழாவையொட்டி தலைநகர் டெல்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்று பலப்படுத்தப்பட்டிருந்தன. டெல்லியில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராகும் பெருமையை பெற்றுள்ளார் மோடி.

இதேவேளை நடிகர் ரஜினிகாந்தும், பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டார். சென்னையிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டார். டெல்லி புறப்படும் போது விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நரேந்திர மோடி மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்கிறார். இது மிகப்பெரிய சாதனை. அவருக்கு என்னுடைய வாழ்த்துகள். அதேபோல, நாடாளுமன்றத்தில் பலம்வாய்ந்த எதிர்க்கட்சியை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எனவே, இது ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு வழி வகுக்கும் என்று நம்புகிறேன். சந்திரபாபு நாயுடுவின் முதல்வர் பதவியேற்பு விழாவுக்கும் அழைப்பு வந்திருக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

# நமது எதிர்கால சந்ததியினர் தாய்மொழி கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்

### சிட்னியில் நடைபெற்ற நூல்வெளியீட்டில் மாத்தளை சோமு

எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் எத்தகைய வழியில் புலம்பெயர் நாடுகளில் மொழிப்பற்றுடன் வாழ வேண்டும் என்பதற்கு இன்றைய தமிழ் ஆர்வலரகளும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் வழிகாட்ட வேண்டும். இதன் மூலமே எதிர்கால சந்ததி செழிப்பாக தாய்மொழிப்பற்றுடன் வாழ முடியும் என எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த வெள்ளியன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய எழுத்தாளர் மாத்தளை சோமு மேலும் தெரிவித்ததாவது:

"புலம்பெயர் மண்ணில் தமிழ்மொழியை பேணிக்காத்திட வீடுகளில் குழந்தைகளுடன் தாய்மொழியில் உரையாட வேண்டியது அவசியம். எதிர்கால சமுதாயம், தமிழை விரும்பிப் படிக்கும் சூழலை உருவாக்க, தமிழின் வளர்ச்சி குறித்து எல்லோரும் அக்கறையோடு தங்களது பங்களிப்பினை செலுத்த வேண்டும்.

பல மொழிகள் உலகில் அழிந்தாலும், தொன்மை வாய்ந்த தமிழ்மொழி இன்றும் உலகில் உயிரோட்டத்துடன் உள்ள மொழியாகும். காலமும் சமுதாயமும் மாறுவதற்கேற்ப, மொழியும் நவீனமயப்பட வேண்டும். எனவே, தமிழைப் பயன்பாட்டு மொழியாக வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயம் இப்போது இருக்கிறது.

மொழி வழிக்கல்வியில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான ஆலோசனைகளையும், ஆக்கபூர்வமான அறிவுரைகளையும் அறிஞர்களும், இலக்கிய ஆர்வலர்களும் வழங்க வேண்டும். தமிழ்க் கல்வி முறையில் மொழிக் கல்வியைப் பொறுத்தவரை அவுஸ்திரேலியாவில் பல காத்திரமான பங்களிப்புகளை தமிழ்ப் பள்ளிகள் வழங்கி, தமிழ் மாணவர்களை சிறப்பாக வழிநடத்துகின்றனர்.







உலகின் மூத்த மொழி என்று வரலாற்று ஆய்வாளர்களால் போற்றப்படும் மொழி எம்முடைய தமிழ்மொழி ஆகும். எம்மொழி எதிர்காலத்தில் நிலையாக மேலோங்க, அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, மொழி வளர்ச்சியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.



இன்றைய இளைய சமுதாயம், வேர்களைத் தேடுகிற காலம் இது. இந்தச் சூழலில் மொழியின் மீது எல்லோரும் நம்பிக்கை வைக்க வேண்டும். எதிர்கால சமுதாயம், தமிழை விரும்பிப் படிக்கின்ற சூழல் உருவாக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை நாம் நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும்.

தாய்மொழி மட்டுமே சீனாவில் பேச்சுமொழியாக இருக்கிறது. அதனால்தான், சீனாவில் இளைய சமுதாயத்தினால் மிகவும் சரளமாகவும் இயல்பாகவும் தங்கள் மொழியை பேச முடிகிறது. அந்தத் திறனை தமிழ்மொழிக்கும் உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் எவ்வாறு நமது மொழியின் தொன்மையை பாதுகாக்கலாம் என்பதையிட்டு தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் மேலும் வளர்ச்சியுற ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி பங்களிப்பை வழங்கும். இதுபோன்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடத்தி, எதிர்கால தமிழ் சந்ததியினருக்கு தன்னம்பிக்கையைக் கொடுக்க வேண்டும்".

இவ்வாறு எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டொக்டர் ஹாரூன் காசிம் ஆற்றினார்.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் திருநந்தகுமார், பாடும் மீன் சிறிஷ்கந்தராஜா ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியீடு, இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

வி.ரி.சகாதேவராஜா...

# தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து பணியாற்றி தமிழின் சிறப்பை உயர்த்த வேண்டும்



### கல்முனை தமிழ் கோட்டத்திற்கான தமிழ் மொழித் தினப் போட்டி நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம்

"வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ்மொழி, வாழிய வாழியவே" என வருடத்துக்கு ஒருமுறை பாடுகின்ற தமிழ்தாய் வாழ்த்தினால் மட்டும் தமிழ்மொழியை வாழவைக்க முடியாது. பாடலைப் பாடுகின்ற நாம் அப்பாடலை அர்த்தப்படுத்தி செயல்படுகின்றோமா? என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது".

கல்முனை தமிழ் கோட்டத்திற்கான தமிழ்மொழித் தினப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தமதுரையின் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்மொழித் தினப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்த காலஅவகாசம் கொடுக்கப்பட்டும், எவ்வித முயற்சிகளுமின்றி மாணவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். தமிழைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தங்களது பணிகளை சரிவர முன்னெடுத்தாலேயே தமிழை வளர்க்க முடியும்.



உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாகக் கற்பதன் மூலம் தமிழின் அருமை பெருமைகளை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. எனினும் ஒருசாரர் தமது பாடத்தை முதன்மைப்படுத்தி தமிழை கற்பதிலிருந்து மாணவர்களை தூரமாக்குகின்றனர். இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு தமிழ் கற்கின்ற சமூகம் உருவாக வேண்டும். அப்போதுதான் மாணவர்களின் ஆற்றல் வளர்வதுடன், அவர்கள் எழுதுகின்றவர்களாவும் பேசுகின்றவர்களாகவும் வளர முடியும்.

'தமிழ் மொழியானது முஸ்லிம்களுக்குரிய மொழி அல்ல. அம்மொழியை கற்கக் கூடாது. அதில் வேறு இனக் கருத்துக்கள் உள்ளன' என்கின்ற கருத்துக்களும் முஸ்லிம் சமூகத்தில் விதைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான தவறான பிரசாரங்களை ஏற்க முடியாது. தமிழ் பேசும் எல்லோருமே தமிழர்கள்தான். தமிழ் முஸ்லிம்களுக்கும் சொந்தமான மொழி. எத்தனையோ முஸ்லிம்கள் பெரும் இலக்கிய நிலையாளர்களாக மாறியுள்ளர். இவ்வாறான வாதங்களைக் கைவிட்டு தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலம் தமிழின் சிறப்பை உயர்த்த முடியும்".

இவ்வாறு கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

கல்முனை தமிழ் கோட்டத்திற்கான பணிப்பாளரும் கல்முனை வலய திட்டமிடல் பிரதி கல்விப்பணிப்பாளருமான வருண்யா சாந்தரூபன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதிக் கல்விப் பணிபப்பாளர்களான எம்.எச்.றியாஸா, யூ.எல்.றியால், உவெஸ்லி அதிபர் எஸ்.கலையரசன், தமிழ் பாட ஆசிரிய வளவாளர் உள்ளிட்டோர் அதிதிகளாகப் பங்கேற்றனர்.

ஜெஸ்மி எம்.மூஸா...
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

## மானுடவியல்



167

பின் பிள்ளையார் திருநள்ளாற்றினின்றும் நீங்கி திருச்சாத்தமங்கைக்குச் சமீபித்து அந்தத் திருப்பதியினின்று, வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருநீலநக்கநாயனாரோடு சென்று, அயவந்தியென்னும் ஆலயத்திற்சென்று; சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருநீலநக்கநாயனாருடைய திருமாளிகைக்குப் போய்த் திருவமுது செய்து, அன்றிரவு அங்கே பள்ளி கொண்டார். மற்ற நாள் பிராதக்காலத்தில் திருநீலநக்கநாயனாரோடும் அந்தியிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்து திருநீலநக்க நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார்.

சிலநாளாயினபின், திருநீலநக்கநாயனருக்கு விடைகொடுத்துத் திருச்சாத்தமங்கையை நீக்கி, திருநாகைக்காரோணம், கீழ்வேளூர் என்னுந்தலங்களை வணங்கிக் கொண்டு, பிற தலங்களையும் வணங்கும்படி எழுந்தருளினார். அப்பொழுது திருச்செங்காட்டாங் குடியில் இருக்கின்ற சிறுத்தொண்டநாயனார் அதனைக் கேள்வியுற்று ஓடிச்சென்று பிள்ளையாரை எதிர் கொண்டு, தம்முடைய திருப்பதியில் அழைத்துக் கொண்டு போனார். பிள்ளையார் அப்பதியிலிருக்கின்ற கணபதீச்சரமென்னுந்திருக் கோயிலை வணங்கி, சிறுத்தொண்ட நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி அந்நாயனாருடைய வீட்டிலேபோய்த் திருவமுது செய்து கொண்டு அங்கெழுந்தருளியிருந்தார். சில நாளாயின பின், திருமருகலுக்குப் போய், சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு அங்கிருந்தார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஆடி மாத சிறப்புகள்

ஆடி மாதம் என்றதும் நம் நினைவுக்கு வருவது ஆடிப்பெருக்கு மட்டும் தான். ஆனால் ஆடி மாதத்தில் நிறைய சிறப்பம்சங்கள் உள்ளன. ஆடி செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை என வரிசையாக நிறைய தினங்கள் கொண்டாடப் படுகிறது. நிறைய சுபதினங்கள் வந்தால் கூட இந்த ஆடி மாதத்தில் யாரும் சுப நிகழ்ச்சிகளை நடத்துவதில்லை.

திருமணம் மற்றும் வளைகாப்பு போன்ற சுப நிகழ்ச்சிகளை இந்த மாதத்தில் வைப்பதில்லை. புதுமணத் தம்பதிகளையும் இந்த மாதத்தில் பிரித்து வைப்பதுண்டு. பஞ்சாங்கம் மற்றும் பாரம்பரிய ரீதியாக இப்படி செய்தால் கூட இதற்கு பின்னால் சில அறிவியல் உண்மைகளும் ஒளிந்து இருக்கத் தான் செய்கிறது.



ஆடி மாதத்தில் தான் பருவ மழையானது தொடங்குகிறது. இதனால் ஆறுகள், வாய்க்கால்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். இந்த தண்ணீர் தான் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. விவசாய நிலங்களை செழிக்க வைக்க ஓடி வரும் ஆடி நீர்ப்பெருக்கை வணங்கி விவசாயிகள் வரவேற்பார்கள். டெல்டா பகுதிகளில் ஆறுகளை வணங்கி வழிபடுவார்கள். இந்த ஆடிப் பெருக்கு திருவிழாவின் போது புதுமணத் தம்பதிகள் புதிய மஞ்சள் கயிறுகளை மாற்றிக் கொள்வார்கள். ஆடி மாதத்தில் தான் விதைகளை விதைப்பார்கள். ஏனெனில் ஆறுகளில் இருந்து வரும் தண்ணீரால் பயிர்கள் செழித்து வளரும். அறுவடையின் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்து ஜோதிடத்தின் படி, ஆடி மாதம் ஒரு அசுபமான மாதமாக பார்க்கப்படுகிறது. எனவே இந்த மாதத்தில் திருமணம், சுப நிகழ்ச்சிகள், புதுமனை புகுவிழா என எந்த சுப காரியங்களும் நடக்காது. இந்த ஆடி மாதத்தை ஒரு சூன்ய மாதம் என்றும் கூறுகின்றனர்.

ஆடி மாதத்தில் பருவ மழை தொடங்குவதால் இந்த மாதத்தில் சுப காரியங்கள் வைப்பது பெரும் சிரமத்தை உண்டாக்கும். அதனால் தான் சுப காரிய விஷயங்கள் இந்த மாதத்தில் தள்ளிப் போடப்படுகிறது.

ஆடி மாதத்தை ஒரு சூன்ய மாதமாக பார்த்தாலும் இந்த மாதத்தில் ஏராளமான பூஜை மற்றும் விரதம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த மாதத்தில் சக்தி தேவிகளையும், பைரவர், வராஹி நரசிம்மர், மகிஷாசுர மர்த்தினி, துர்க்கை அம்மன் போன்றோர்களை பக்தர்கள் மறக்காமல் வழிபடுகின்றனர். எனவே ஆடி மாதத்தில் நிறைய சிறப்பம்சங்களும் அதே நேரத்தில் அறிவியல் பூர்வமாக சில அசுப அம்சங்களும் இருக்கத் தான் செய்கின்றன.




## ஸ்ரீ கண்டி கதிர்காம ஆலய தேர்த்திருவிழா





கண்டி மாநகரில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு ஸ்ரீ கண்டி கதிர்காம ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 30



மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்மனவலிமை இன்மையில் கவலைப்படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான்.

உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதளவில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும். நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப் படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயாளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும்.

பசித்தவனுக்கு உணவு. நிர்வாணமாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி,முடவனுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்படும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது. உதவும்போதுதான் அனைவருக்கும் இன்பம் பிறக்கும்.

பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் தன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும்.

# அமைதியான சூழலில் சிவன் வழிபாடு

சிவனொளிபாத மலையின் அருகில் அமைந்துள்ள கிலன்டில்ட் தோட்டத்தில் மிக பிரமாண்டமாக அமையப் பெற்று அடியார்களுக்கு அருளாசி வழங்கும் ஈசனின் திருவடியை பணிந்து வணங்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. கிலன்டில் தோட்ட இந்து இளைஞர் மன்றத்தால் ஒரு வருட காலத்துக்குள் திட்டமிடப் பட்டு அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் 27அடி உயரமான சிவபெருமானின் சிலை, 27அடி உயரமான திரிசூலம், 10அடி நீளம் 8 அடி அகலம் கொண்ட நந்தி , அபிஷேக லிங்கம், 108 லிங்கங்கள், தியான லிங்கம் (தனியான தியான அறையில்) மற்றும் மகா விஷ்ணு முதலிய அம்சங்கள் அமையப்பெற்றுள்ளமை சிறப்பு.

ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தம் பாவங்களையும் துயரங்களையும் கழுவி தூய உள்ளத்தவராய் புத்துயிர் பெற்று ஆசி பெறுவதாய் பூஜையின் போதான 27 அடி நீளமுள்ள கங்கையை சடையில் வைத்த எம் பெருமானின் தீர்த்த மழை என்னையும் மெய் சிலிர்க்க வைத்தது. மனதால் என்னப்பன் சிவனோடு பேச அமைதியான சூழலில் தியான லிங்கத்தோடு தியான அறை அமைந்துள்ளமை சிறப்பு.

எம் பெருமான் சிவனின் அருளைப் பெறவரும் அடியவர்களுக்காக சகல நேரங்களிலும் அர்ச்சனை செய்து பூஜித்துக் கொள்ள கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு வழிகாட்டுவதற்கும் சிவனடியார்கள் காணப்படு









கின்றனர். பக்த அடியார்களுக்கு அன்ன தானமும் வழங்கப்படுகின்றது. ஆலய சூழலிலேயே வழிபாடுகளுக்கு தேவையான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள முடிகின்ற அதேவேளை வாகன நிறுத்துமிட வசதிகளும் காணப்படுகின்றன.

இறையுணர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அருமையான சூழலில் அமைந்துள்ள ஆலயத்திற்கு இந்துக்கள் மட்டுமின்றி சகோதர மத உறவுகளும் சுற்றுலா பயணிகளும் சிவனின் மகிமை அறிந்து தேடிவந்து தரிசனம் பெற்றுச் செல்வதை காணும் போது என்னப்பன் சிவனின் அருளால் மனிதம் நிலை பெற்றிருப்பதை உணர முடிந்தது.

எம் பெருமான் சிவனின் அருளை பெற்றுக் கொள்ள வருவோர் கலா சார ஆடைகளோடு (ஆண்கள் வேட்டி , பெண்கள் சேலை, சல்வார்) வந்து அருள் பெற்றுச் செல்லலாம். தூர இடங்களில் இருந்து சிவனை தரிசிக்க வரும் அடியார்களுக்கு ஆலயத்தில் அணிந்து கொள்ள வேட்டிகளும் வழங்கப்படுகின்றன. சிவனடியார்கள், அன்பர்கள் நிச்சயம் ஆலயத்திற்கு சென்று அருளையும் ஆலய சூழலில் கிடைக்கின்ற மனத் திருப்திகரமான உணர்வையும் பெற்று கொள்ள வேண்டுகின்றேன்.

இத்தனை சிறப்புகளோடு குறுகிய காலத்தில் (ஒரு வருடத்திற்குள்) ஆலயத்தை அமைத்து சிவனடியார்களுக்கும் அன்பர்களுக்கும் சிவனின் அருளை பெற்று கொடுத்த கிலன்டில் தோட்ட இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் தோட்ட பொது மக்களுக்கும் துணை நின்ற அத்தனை நல்லுள்ளங்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள். உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் என்னப்பன் சிவனின் அருள் நிறைவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**கே. காந்தன்**

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20086. சைவம் என்றால் என்ன?** சைவம் என்றால் சிவ சம்பந்தமுடையது என்பது பொருள்.

**20087. சைவ சமயம் எப்போது தோன்றியது?**

சைவ சமயம் அநாதியானது. அநாதி என்றால் ஆதி அற்றது (தொடக்கமில் காலம் தொட்டு) என்பது பொருள்.

**20088. யார் சைவர்?**

சிவபெருமானை முழுமுதற் கடவுள் என உணர்ந்து வழிபடுபவரே சைவர்.

**20089. சைவ சமயத்தின் முக்கிய நூல்கள் யாவை?**

பதினான்கு சாத்திரங்களும், பன்னிரண்டு திருமுறைகளும்.

**20090. சமயக் குரவர்கள் யாவர்?**

1. திருஞான சம்பந்த நாயனார், 2. திருநாவுக்கரசு நாயனார் 3. சுந்தரமூர்த்தி நாயனார், 4. மாணிக்கவாசகர்,

**20091. அகச்சந்தானக் குரவர்கள் யாவர்?**

1. திருநந்தி தேவர், 2. சனற் குமாரமுனிவர், 3. சத்திய ஞான தரிசினிகள், 4. பரஞ்சோதி முனிகள்

**20092. புறச்சந்தானக் குரவர்கள் யாவர்?**

1. ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார், 2. அருள்நந்தி சிவாச்சாரியார், 3. மறைஞான சம்பந்தர் சுவாமிகள், 4. உமாபதி சிவாச்சாரியார்

**20093. திருமுறை மற்றும் சாத்திரங்களின் அமைப்பு எவ்வாறு உள்ளது?**

திருமுறைகள் சிவபெருமானின் பெருமைகளை விளக்கும் புகழ் நூல்களாக் அமைந்திருக்கின்றன.

சாத்திரங்கள் சைவ சமயத்தின் கொள்கைகளை விளக்கும் பொருள் நூல்களாக அமைந்துள்ளன.

**20094. திருமுறை என்ற சொல்லுக்குப் பொருள் யாது?**

முறை என்னும் சொல் நூல் என்னும் பொருளை உடையது. திருமுறை என்பது மாறாத செல்வத்தை மக்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிகாட்டும் நூல் என்பது பொருள்.

இந்நூல் 12 பகுதிகளாக தொகுக்கப் பெற்று பன்னிரு திருமுறை என்று போற்றப்படுகிறது.

**20095. திருமுறைகள் பிரணவத்துள் அடங்கும் என்பதை விளக்குக?** பன்னிரு திருமுறையில் முதல் பாடல் 'தோடு' என்னும் சொல்லுடன் தொடங்கி, இறுதிப் பாடலில் 'உலகெலாம்' என்ற சொல்லுடன் முடிகிறது. தோடு என்பதில் முதல் எழுத்து ஓ உலகெலாம் என்பதில் ஈற்றெழுத்தும் ஆகும்.

**20096. பன்னிரு திருமுறைகளில் மொத்தம் எத்தனை பாடல்கள்?**

18,497 பாடல்கள்.

**20097. நால்வர் பெருமக்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் எவ்வளவு?**

திருஞான சம்பந்த சுவாமிகள் – 16 ஆண்டுகள்

திருநாவுக்கரசு சுவாமிகள் – 81 ஆண்டுகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் – 18 ஆண்டுகள்

மாணிக்கவாசகர் – 32 ஆண்டுகள்

**20098. திருத்தொண்டர் தொகை ஆசிரியர் யார்?**

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**20099. சாத்திரத்தில் தோத்திரம், தோத்திரத்தில் சாத்திரம் என்று கூறப்படும் நூல்கள் எவை?**

சாத்திரத்தில் தோத்திரம் – போற்றிப் பஃறொடை

தோத்திரத்தில் சாத்திரம் – திருமந்திரம்

## இந்தியா பிரதமர் மோடி...

இப்பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட உலக தலைவர்கள் பலர் பங்கேற்றிருந்தனர். அத்துடன் மாநில ஆளுநர்கள், மாநில முதல்வர்கள் திரைப்படத்துறை பிரபலங்கள், தொழிலதிபர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 8000 அதிதிகள் இந்நிகழ்விற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாலைதீவு ஜனாதிபதி முஹம்மது முயிஸ், சீசெல்ஸ் துணை ஜனாதிபதி அகமட் அபிப், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, மொரிசியஸ் பிரதமர் பிரவீன் குமார் ஜெகநாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் பிரசந்தா, பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே ஆகிய உலக நாடுகளின் தலைவர்கள் மோடியின் பதவி ஏற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்திய பிரதமரின் பதவியேற்பையொட்டி தலைநகர் புதுடில்லி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. விழா நடைபெற்ற ஜனாதிபதி மாளிகை விழாக்கோலம் பூண்டிருந்தது.

நடைபெற்று முடிந்த இந்தியாவின் மக்களவைத் தேர்தலில் பாஜக உட்பட எந்த கட்சியும் தனிப்பெரும்பான்மையை பெற்றிருக்கவில்லை.

எனினும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கட்சியின் கூட்டணி 293 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதையடுத்து கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி யமைக்க பாஜக முடிவு செய்தது. நேற்றைய தினம் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு முன்னிலையில் பிரதமர் மோடி இந்தியப் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இதையடுத்து அவரது அமைச்சரவையும் பதவியேற்றுக் கொண்டது.

பாரதப் பிரதமராக மூன்றாவது முறையாகவும் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி 1952, 1957, மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்ற இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சாதனையை சமன் செய்துள்ளார்.

பிரதமரின் பதவியேற்பையடுத்து 30 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், 5 தனி பொறுப்பு இணை அமைச்சர்கள் 36 இணை அமைச்சர்கள் என 75 அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்களில் முன்னாள் அமைச்சர்களான ஜெயசங்கர், நிர்மலா சீத்தாராமன் ஆகியோரும் உள்ளடங்குகின்றார்கள். பிரதமர் மோடியின் பங்கேற்றுவிழாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே மட்டுமே அந்த கட்சியின் சார்பில் கலந்துகொண்டுள்ளார்.

## மாணவர்களின் பருவகால...

சபையை மக்கள் மயப்படுத்துவதனை கட்டம் கட்டமாக மேற்கொள்ள வேண்டும் என்று பாராளுமன்றத்தில் வாதப் பிரதிவாதங்கள் இருந்தன. பிலிப் குணவர்தன கூறியது போல், ஒரே நாளில் மேற்கொள்ளவேண்டும் என்ற தலைப்பில் இலங்கை முழுவதும் உள்ள டிப்போ ஊழியர்கள் இரவோடிரவாக மக்கள் மயப்படுத்தப்பட்டது.

பண்டாரநாயக்கா, தேசியமயமாக்கிய முதல் பஸ் இன்னும் உள்ளது. தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களின் அன்றாட போக்குவரத்து மற்றும் சிறிய பொருட்களின் போக்குவரத்திற்கு இ. போ. ச. ஒரு பெரிய சக்தியாக உள்ளது எப்போதும் பொருளாதாரத்தில் மிக முக்கியமான பங்கை அது வகிக்கிறது. பாடசாலை சேவைக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

இ. போ. சவின் முன்னேற்றத்திற்கு ஒரு பாரிய பலம் உள்ளதாக நாங்கள் நம்புகிறோம். பிள்ளைகளுக்கு கொடுக்கக்கூடிய சிறந்ததைக் கொடுக்கும் திறன் எங்களிடம் உள்ளது. நானும் நீண்ட காலத்திற்கு முன்பு இலங்கை போக்குவரத்துச் சபைக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தேன். அந்தக் காலத்திலும் இது போன்ற பல கோரிக்கைப் போராட்டங்கள் நடந்தன. அவற்றை ஒவ்வொன்றாக ஒவ்வொரு தொழிற்சங்கத்துடனும் பேசித் தீர்க்க முடிந்தது. குறிப்பாக, பணிக்கொடை இ. போ .ச. அனுபவிக்கும் ஒரு முக்கியமான நன்மையாகும். அத்தகைய சிறப்பான சூழ்நிலையை உருவாக்குவதற்கு எமக்கு முடியுமாக இருந்தது.

எனவே, இந்த நிறுவனத்தை நாம் குறிப்பாக பாதுகாக்க வேண்டும். எமது போக்குவரத்துத் துறையின் முதுகெலும்பாக திகழும் இந்த இ. போ. சபை பஸ்களே மக்கள் அன்றாடம் பயணிக்கும் முக்கிய போக்குவரத்து சாதனம். அபிவிருத்தி, முன்னேற்றம் என்று எவ்வளவுதான் பேசினாலும் இன்றும் கூட பெரும்பாலானோர் பேருந்துகளில்தான், பயணிக்கின்றனர். இதுதான் யதார்த்தம். இந்த முதுகெலும்பை பாதுகாத்தால், தொலைதூர கிராமங்களில் உள்ள பேருந்துகள் தொடர்ந்தும் இயங்கும். எனவே, இதை நாம் பாதுகாக்க வேண்டும்''.

## SLFP தலைமையிலான...

எதிர்காலத்திலும் வெற்றி பெறக்கூடிய திட்டங்கள் எம்மிடமுள்ளன. வெற்றிபெறும் வகையில் திட்டங்களை நாம் உருவாக்குவோமென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணியின் முதலாவது கூட்டம் அம்பலாங்கொடை பிரதேசத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர,சுசில் பிரேம ஜயந்த, நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, சுரேன் ராகவன், சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமால் லன்சா, பிரியங்கர ஜயரட்ண உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் சுசில்,

தற்போது இந்த கூட்டணியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு மூன்று மடங்காக அதிகரிப்பர். அந்த வகையில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலிலும் தீர்மானிக்கும் சக்தியாக இந்த கூட்டணியே அமையும்.

ஜனாதிபதியை நாம் இறக்குமதி செய்தோம். அவர் நகரசபை அல்லது பிரதேச சபையில் கூட அங்கத்துவம் வகிக்காதவர். விவசாயிகளின் உரம் தொடர்பான பிரச்சினையை பேசியதால், என்னை அரசாங்கத்திலிருந்து நீக்கினர். எனினும் சில காலங்களின் பின்னர் அரசாங்கத்துடன் சேர நேர்ந்தது.

அரசியலில் இறக்குமதி செய்வது சரி வராது. தற்போது அரசியலுக்கு கோடீஸ்வரர்களை தேடுகின்றனர். நாட்டில் போராட்டம் நடைபெற்றது. அதன்பின் நாட்டை பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வரவில்லை. ஆனால் ஒரே ஒரு உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். நாம் அவருக்குப் பலமாக செயற்படுகிறோம். அதனால் நாடு இப்போது படிப்படியாக முன்னேறி வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டணியுடன் இணைந்து எதிர்காலத்தில் செயற்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 2025 வரவுசெலவு திட்டத்துக்கு...

தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுபற்றித் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்: இவ்வருடம் முக்கியமான தேர்தல்கள் நடத்தப்படும்.

இதனால்,2025 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் சமர்ப்பிக்கப் படமாட்டாது.இதற்கு முன்னரும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வரவு செலவு திட்டத்திற்குப் பதிலாக இடைக்கால நிதி ஒதுக்கீடே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2024 பட்ஜட், இவ்வாண்டின் டிசம்பர் 31 வரைக்குமானதே. இந்நிலையில், 2025 ஆம் ஆண்டுக்காக தனியான வரவு செலவு திட்டத்திற்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற வேண்டியுள்ளது. 2025 முதலாம் காலாண்டிற்காக மேற்படி இடைக்கால நிதி ஒதுக்கு இடம்பெறும். இதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படும். இடைக்கால நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், அதன் மூலம் எவ்வித புதிய யோசனைகளும் முன்வைக்கப்பட மாட்டாது. இதுவரை முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம் அஸ்வெசும உள்ளிட்ட முக்கியமான செலவுகளுக்காகவே இது பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனங்கள் இறக்குமதி...

முதல் தொழிற்சாலைகள் மற்றும் கனரக வாகனங்களுக்கான இறக்குமதி ஆரம்பிக்கப்படும்.

பின்னர், இரண்டாம் கட்டமாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

மூன்றாவது கட்டமாக, குறிப்பிட்ட வரம்பில் சிறிய கார்கள் இறக்குமதி செய்யப்படும். 2025 ஆம் ஆண்டு நான்காம் கட்டமாக, சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார். மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிப்பது அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருக்குமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை புத்தம் புதிய வாகனங்கள் அல்லது இரண்டு வருடங்கள் பழமையான வாகனங்களே இறக்குமதி செய்யப்படவுள்ளன.

## ஐ.நா. பொருளாதார...

*Economic and Social Council* இன் சபை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இலங்கை பங்களிப்புடன் சமூக சபையின் வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, வளர்ச்சிக்கான நிதியுதவி, பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு ஆதரவளித்தல் காலநிலை, நீதி, பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தொழில் துறையை மேம்படுத்தல்.

சர்வதேச நிதிக் கட்டமைப்பில் சீர்திருத்தம் உள்ளிட்ட திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கும். இன் 54 உறுப்பு நாடுகளுக்கு 07 ஜூன் 2024 அன்று தெரிவுசெய்யப்பட்ட 18 நாடுகளில் ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் இருந்து உஸ்பெகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுக அடங்கும். (*Economic and Social CouncilECOSOC*) க்கான தேர்தலில் இலங்கை தொடர்ச்சியான நான்காவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ளது. இலங்கையின் இராஜதந்திர நடவடிக்கையில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கலாகும்.

## கிரிக்கெட்டை...

அமைச்சரவை உப குழுவின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் இலங்கையின் இதயத்துடிப்பாகும். இது நமது தேசத்துக்கு புன்னகை, பெருமை மற்றும் ஒற்றுமையை கொண்டு வந்த விளையாட்டாகும். எங்களது வெற்றிகள் குறிப்பாக உலகக்கிண்ண வெற்றி அனைத்து இலங்கையரின் இதயங்களிலும் மறக்க முடியாத நினைவுகளை பதித்துள்ளது.

ஆயினும்கூட, இன்று, நமது நேசத்துக்குரிய விளையாட்டு நெருக்கடியிலுள்ளது.

ஐசிசி உலகக் கிண்ணம் 2023 மற்றும் ஐசிசி, டி 20 ஆகியவற்றில் சமீபத்தில் கிடைத்த ஏமாற்றங்கள், சாதாரண சம்பவங்கள் அல்ல. அவை நமது கிரிக்கெட் உட்கட்டமைப்புக்குள் ஆழமாக வேரூன்றியிருக்கும் பிரச்சினைகளின் அப்பட்டமான குறிகாட்டிகள்.

இந்தச் சிக்கல்களைத் தற்காலிகத் திருத்தங்களால் தீர்க்க முடியாது. நமது கிரிக்கெட்டை தனிப்பட்ட நிறுவனமாக மாற்றியவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கும் துணிச்சலான அணுகுமுறையே நமக்குத் தேவை.

நமது கிரிக்கெட்டின் நிலையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவர் என்ற வகையில், சீர்திருத்தத்துக்கான அவசரத் தேவையை என்னால் சான்றளிக்க முடியும். எங்கள் அறிக்கை ஒரு தெளிவான பாதையை முன்வைக்கிறது.

மேலும் புதிய சட்டத்தின் மூலம் இந்த முக்கியமான மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கான விளிம்பில் இப்போது இருக்கிறோம். இலங்கை கிரிக்கெட்டுக்கு இது ஒரு தீர்க்கமான தருணம்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய விளையாட்டுச் சட்டம் மற்றும் அரசியலமைப்புடன் சீர்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டோ வியாபாரமோ அல்ல. இது நமது தேசிய உணர்வின் பிரதிபலிப்பாகும்.

நமது வெற்றியை நிதி அளவீடுகளால் அளக்காமல், களத்தில் நாம் அடையும் வெற்றிகள் மற்றும் மக்களிடம் உள்ள நம்பிக்கையை வைத்து அளவிட வேண்டும்.

தற்போது, எங்களின் செயல்திறன் ஏற்கத்தக்கதாக இல்லை. மாற்றத்துக்கான நேரம் இது இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## நட்டத்தில் இயங்கிய...

மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கி யுள்ளதாகவும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பொற்காலம் என அணில் முனசிங்கவின் காலம் குறிப்பிடப்படுகிறது.

அதற்கு பின்னர் அடுத்து வரும் பொற்காலம் அமைச்சர் பந்துல குணவர்தனவின் காலத்திலேயே ஆரம்பமாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றுள்ள இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் பதவி உயர்வு, மற்றும் ஆட்சேர்ப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கை போக்குவரத்து சபை ஒரு சிறந்த நிறுவனமாகும். நாட்டின் முப்படைகளுக்கு இரண்டாவதாக சிறந்த அணியாக, இலங்கை போக்குவரத்து சபையை குறிப்பிட முடியும்.

யுத்த காலத்திலும் கொவிட் காலத்திலும் சாதாரண மக்களுக்கும் படையினருக்கும் சிறந்த சேவைகளை வழங்கியதன் மூலம், இந் நிறுவனம் பெயர் பெற்ற நிறுவனமாக திகழ்கிறது.

அன்றாடம் திரட்டப்படும் 20 ரூபா நோட்டுக்களை சேர்த்து சம்பளம் வழங்கிய காலம் ஒன்றுண்டு. அவ்வாறு இயங்கிய இலங்கை போக்குவரத்து சபைதான் இன்று இந்தளவு முன்னேற்றமடைந்துள்ளது. இது பெருமைப்படக்கூடிய விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சைப்பிரஸ் அனுப்புவதாக...

பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய கைதான

இப்பெண் சிலாபம் பிங்கிரிய பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நப ரைநேற்று பிங்கிரிய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து , ஹெட்டிபொல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இரண்டு பெண்களை சுற்றுலா வீசா மூலம் டுபாயில் தொழில் வாய்ப்புக்காக அனுப்ப முயற்சித்த நபர் ஒருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சுற்றுலா விசா மூலம் துபாய்க்கு செல்ல முயன்ற இரு பெண்கள் மீது சந்தேகம் அடைந்த பணியகத்தின் விமான நிலைய பிரிவு அதிகாரிகள், பெண்களை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்தியுள்ளனர். இதன் போது இவர்கள் துபாயிலுள்ள பல்பொருள் அங்காடிகளில் வேலைக்குச் செல்வது தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பை பெறுவதற்கு எந்தவொரு நிறுவனத்துக்கோ அல்லது நபருக்கோ பணம் அல்லது கடவுச்சீட்டை வழங்குவதற்கு முன், பணியகத்தின் *www.slbfe.lk* என்ற இணையதளத்தில் ஊடாக, வெளிநாட்டு வேலைகளுக்கு பணியமர்த்துவதற்கு குறிப்பிட்ட முகவருக்கு சரியான அனுமதி உள்ளதா? அந்த முகவர் நிறுவனம் சம்பந்தப்பட்ட நாட்டில் குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கான அங்கீகாரத்தை பெற்றுள்ளதா? என்பதைக் கண்டறியுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது..

## கடவுச்சீட்டுகளுக்கு...

திணைக்களத்தை இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் பொலிஸ் மற்றும் விமான நிலைய அதிகாரிகளால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) 523 போலி கடவுச்சீட்டுகள் பதிவாகியுள்ளன.

எனவே , புதிய தேசிய அடையாள அட்டை (NIC) இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதில்லையென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்ட போதே முன்னாள் நிதி அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைத்து பலப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லவதற்கு தேசிய செயலாளர் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சி சார்பற்ற, தேசிய மற்றும் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளர் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் கூறினார்.

## இன்றைய பலன்கள்

(10.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :**
பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு.

**ரிஷபம் :**
புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து புதிய பாதை அமைத்துக் கொடுப்பர்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் மேல் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். கேட்ட இடத்தில் மாறுதல் கிடைக்கும்.

**கடகம்:**
விலை உயர்ந்த பொருட்களை விற்று அதன் மூலம் வரும் தொகையைக் கொண்டு முக்கிய நிகழ்ச்சிகளை நடத்தும் சூழ்நிலை உருவாகலாம்.

**சிம்மம்:**
திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்தும் முடித்து வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:**
பெற்றோரை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கலாம். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்து இணையலாம்.

**துலாம் :**
நினைத்தது நிறைவேறும். கல்யாண கனவுகள் நனைவாகும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு குழப்பம் அகலும். மாற்றங்கள் திருப்பி தரும்.

**விருச்சிகம் :**
இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும் சூழல் உருவாகும். அதிர்ஷ்ட தேவதை இல்லத்தில் அடி எடுத்து வைக்கும் நேரம் இது.

**தனுசு :**
மாமன், மைத்துனர் வளியில் மனக்க சப்பு தரும் தகவல் வரலாம். புதிய ஒப்பந்தங்கள் கை நழுவி செல்லும். புனித பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**மகரம் :**
வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டும் என்று விருப்பியவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம் :**
வாங்கிய இடத்தையும் வீட்டையும் விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சி அடையும் விதத்தில் பூமி யோகம் வாய்க்கும்.

**மீனம் :**
வியாபாரத்தில் இருந்து கூட்டாளிகள் விலக நேரிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளுடன் மோதல் உருவாகலாம். கவனம் தேவை.

## நுகர்வோர் பாதுகாப்பு...(03ஆம் பக்க தொடர்ச்சி)

இரண்டு வாரத்தில் சமர்ப்பிப்பு எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தற்போது குறைவடைந்து வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

எனினும், நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை பிரிவில் அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. நாடளாவிய ரீதியில் 277 அதிகாரிகளே தற்போது சேவையில் உள்ளனர்.

இந்நிலையை நிவர்த்தி செய்யும் வகையில், மேலும் விசாரணை பிரிவு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இந் நடவடிக்கையை முன்னெடுக்க முடியும். விரிவான சந்தை நடவடிக்கைகள் நாட்டில் இடம் பெறுவதால், நுகர்வோருக்கு அநீதி ஏற்படுவதை அறிய முடிகிறது.

அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு வர்த்தகர்கள் செயற்படுகின்றனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் நரேந்திர...(03ஆம் பக்க தொடர்ச்சி)

இன்று இந்தியாவில் 03 ஆவது முறையாக ஆட்சி அமைத்து மீண்டும் அதிகாரத்தில் அமர்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. உலகத்தின் வலிமை மிக்க தலைவராகவும் அவர் மாறியுள்ளார் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் சார்பாக தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்

## அமைச்சர் அலி சப்ரி...

என்ற ரீதியில், அவர் அழைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

"நியாயமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான பன்முகத்தன்மையை வலுப்படுத்துதல்" என்ற கருப்பொருளின் கீழ், ரஷ்யா இம்மாநாட்டை நடத்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

"உலகளாவிய நிர்வாகத்தை சீர்திருத்துதல், நிலையான வளர்ச்சியை உறுதி செய்தல், உலகளாவிய பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் பிரிக்ஸ் மற்றும் குளோபல் சவுத்தின் பங்கு (*Global South*) " என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வழங்கப்படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரஷ்யா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த குழுவினருடன், இருதரப்பு சந்திப்புகளை நடத்துவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வேலை நிறுத்தம்...

காலகட்டங்களில் துரித பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்காதமையே இந்நிலைமைக்கு காரணம்.

சம்பள முரண்பாடு குறித்து முறையான ஆய்வு நடத்தி அறிக்கை தயாரிக்க கடந்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் இது மக்கள் சிரமப்படும் காலமாகவுள்ளது. மீண்டும் பொருளாதார ரீதியில் ஸ்திர நிலைமையை அடைந்திருந்தாலும் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்.

எனவே, வேலைநிறுத்தம் செய்வதற்கு இது சரியான நேரம் அல்ல.

சகல அரச அதிகாரிகளும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயல்படுமாறு கோரிக்கை விடுக்கிறேன்.

பிரச்சினைகளை நாம் ஒருபோதும் புறக்கணிக்க மாட்டோம். அது பற்றிய புரிதல்கள் எமக்குள்ளது.

அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான வேலைத் திட்டத்தை தயாரித்துள்ளோம்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடுவெல பிரதேச மக்களின் நலன்களை ஆராய்வதற்காகவும், அம்மக்களுக்கான நிவாரண வேலைத்திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காகவும் அப்பகுதிக்கு சென்றிருந்தபோதே சாகலரத்தநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

## பஸ் வண்டி விபத்தில்...

நேற்றுக்காலை இவ்விபத்து இடம்பெற்றது. காயமடைந்தவர்களில் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரட்டெம்பே பகுதிக்கு கல்விச் சுற்றுலா சென்ற மாலபே ராகுல வித்தியாலய மாணவர்கள் பயணித்த பஸ் வண்டியே விபத்துக்குள்ளானது. காயமடைந்தவர்கள் வரக்காப்பொளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வரக்காப்பொளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# வடக்கின் உதயம்

சின்னச்சிப்பிகுளம் தொடக்கம் ஆனைவிழுந்தான் வரையான

## வீதி காபட் இடும் பணிகள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் ஆரம்பித்து வைப்பு





செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்னச்சிப்பிகுளம் தொடக்கம் ஆனைவிழுந்தான் வரையான புனரமைக்கப்பட வேண்டிய 2.2 கிலோமீட்டர் வீதியில் முதற்கட்டமாக 800 மீற்றர் நீளமான வீதியை காபட் இடும் பணிகள் நேற்று 9 ஆம் திகதி, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மக்களின் தொடரான கோரிக்கையையடுத்து கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் முயற்சியினால் செட்டிகுளம் பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்னச்சிப்பிகுளம் தொடக்கம் ஆனைவிழுந்தான் வரையிலான 2.2 கிலோமீட்டர் வீதியானது 2020ஆம் ஆண்டின் ஒரு இலட்சம் கிலோமீட்டர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் மூலம் காபட் இடப்படுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் குறித்த வீதியானது மாகாண சபைக்குச் சொந்தமானது என அடையாளப்படுத்தப்பட்டமையாலும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மேற்படி வீதி நிர்மாணிக்கும் பணி தாமதமடைந்தது. இராஜாங்க அமைச்சரினால் அடையாளப்படுத்தப்பட்ட குறித்த வீதியினை அமைப்பதற்கு மாகாண அபிவிருத்தி விசேட ஒதுக்கீட்டின் மூலம் (PSDG) முதற்கட்டமாக 800 மீட்டர் காபட் பாதை அமைக்கும் பணிகள் நேற்று (8) ஆரம்பிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சரின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட இவ்வேளைத் திட்டத்தை இராஜாங்க அமைச்சர் வருகை தந்து ஆரம்பித்து வைக்க வேண்டும் என தொடரான கோரிக்கைகளை முன்வைத்தனர், இதற்கமைய முதற்கட்டமாக 800 மீட்டர் வரையிலான காபட் வீதிக்கான வேலைத்திட்டம் நேற்று இராஜாங்க அமைச்சரினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபனும் கலந்து கொண்டார். குறித்த வீதியின் மீதமுள்ள அபிவிருத்திப் பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா

## மருதோடை கந்தசாமி கோயில் கும்பாபிஷேகம்



**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

வவுனியா, ஓமந்தை பிரதேச மருதோடை கிராமத்தின் தொன்மைமிக்க மருதோடை கந்தசாமி கோயில் மஹா கும்பாபிஷேகம் நேற்று சிறப்புற நடைபெற்றது.

மூன்று நாட்கள் கிரியைகள் நடைபெற்று இறுதி நாளான நேற்று (09) கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வில் மருதோடை முருகன் பாடல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாணவிகளின் நடன நிகழ்வும் மாணவர்களின் நேற்றைய கும்பாபிஷேக நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆதார வைத்தியசாலைக்குள் அத்துமீறிப் புகுந்து தாக்குதல்

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

பருத்தித்துறை ஆதார வைத்திசாலைக்குள் புகுந்து தாதியர் மீதும் காவலாளி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை(08) இரவு இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடத்தில் விடுதி இலக்கம் ஏழில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்ற வில்லை எனத் தெரிவித்து சிலர் வைத்தியசாலைக்குள் புகுந்து தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் தாதியர் ஒருவர் மீதும் காவலாளி ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாகர்கோவிலில் இருந்து பருத்தித்துறைக்கு காலை நேரத்தில் மேலதிக பஸ்சேவை

மாணவர்கள், பொதுமக்கள் கோரிக்கை

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

நாகர்கோவிலில் இருந்து பருத்தித் துறை வரைக்கும் காலை வேளையில் ஒரு பஸ் சேவையினை மேற்கொள்ளுமாறு பொது மக்கள், மாணவர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காட்டில் இருந்து அதிகாலை புறப்படும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி பருத்தித்துறை நகரை வந்தடையும்போது காலை 07. 40 மணி ஆகிறது. ஆனால் பாடசாலைகள் 7.30 மணிக்கே ஆரம்பமாகிறது. இதனால் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் நேரம் பிந்தியே பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்த பஸ் வண்டியில் அதிக அளவு பயணிகள் பயணிப்பதனால் மிதிபலகையிலும் நின்று பலர் பயணிக்கின்றனர். சில இடங்களில் பயணிகளை ஏற்றாமலும் பஸ் வண்டி பருத்தித்துறை நகரை சென்றடைகின்றது. இதன் காரணமாக காலை 7 .20 மணியளவில் பருத்தித்துறையை வந்தடையக் கூடிய வகையில் நாகர்கோவிலில் இருந்து ஒரு பஸ் சேவையினை மேற்கொள்ளும் பட்சத்தில் நாகர்கோவில், அம்பன், குடத்தனைப் பகுதிகளில் இருந்து வடமராட்சியில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களும் நேர காலத்துடன் வர முடியும் என மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு மாத சந்தோஷம் 15ஆம் திகதியுடன் பறிபோவதாக வடக்கு மீனவர்கள் கவலை

**யாழ்.விசேட நிருபர்**



தமது இரண்டு மாத சந்தோஷம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் பறிபோக போவதாக யாழ் மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் கவலை தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார். இந்தியாவில் மீன் பிடித் தடைக் காலம் கடந்த இரண்டு மாதங்களாக இருந்தமையால், வடபகுதி கடற்றொழிலாளர்கள் மிகவும் சந்தோஷமாக தொழில் மேற்கொள்ள கூடியதாவிருந்தது.

எதிர்வரும் 15ம் திகதி அந்த மீன்பிடி தடைக் காலம் முடிவடைவதால் மீண்டும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் வாய்ப்புகள் உள்ளதால் இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவதைத் தடுக்க இரு நாட்டு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்

வடக்கிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு

## செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம், இம்மாதம் 4ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியிலுள்ள யாழ். மாவட்ட திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது.

அங்கு இரண்டாவது தடவையாக இடம்பெறும் இம்முகாம், இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயட்ட சமித்தியினுடைய தொழில்நுட்ப உதவியுடன் இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகம் மற்றும் மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சு, யாழ். மாவட்ட செயலகம், மாகாண சமூக சேவைகள் திணைக்களம் என்பன இணைந்து இந்த இலவச முகாமை ஏற்பாடு செய்துள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சு இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது.இதற்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் ஏற்கனவே பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது. தங்கள் அவயவங்களை துரதிர்ஷ்டவசமாக இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கான கௌரவமான சமுதாய வாழ்வை மீளக் கொடுக்கும் முகமாகவும் அதேநேரம் அவர்களை பொருளாதார ரீதியாக வலுப்பெறச் செய்யும் நோக்கோடும் இம் முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் முறை 350 பயனாளிகள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.


சியபத்த பினான்ஸ்

பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 138 வாகனங்கள்

2024 ஜூன் 15 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

சியபத்த பினான்ஸ் வாகன கூடம்,
இல. 344, சிறிமங்கலவத்தை, மம்பே, பிலியந்தலை.

பரீட்சிப்பது ஜூன் 12,13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் பிலியன்தலை மற்றும் தம்புள்ளை வாகன நிலையங்களில்
(தம்புள்ளை நிலையம் - இல.: 165/15, பெல்வெஹர, தம்புள்ளை, 0740479916 -– சுரேஷ்)
மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

பிலியந்தலை கூடம் : 0117 605245 / 076 8905692 (அஜித்)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| MOTOR MINI TRUCK | | |
| WP-PP-6XXX | TATA,ACE | 2010 |
| SP-PC-0XXX | MICRO,MPV JUNIOR 111 | 2011 |
| SP-PS-1XXX | TATA,ACE | 2011 |
| WP-PS-2XXX | TATA,ACE | 2011 |
| WP-PQ-9XXX | TATA,ACE | 2011 |
| WP-PU-0XXX | TATA,SUPER ACE | 2012 |
| SP-PX-3XXX | LANKA ASHOK LEYLAND,DOST LS | 2013 |
| WP-PW-0XXX | TATA,SUPER ACE | 2013 |
| NW-PY-0XXX | TATA,ACE EX 2 | 2014 |
| NW-PY-6XXX | MAHINDRA,BOLERO MAXI TRUCK | 2014 |
| UP-DAA-1XXX | TATA,207 RX PICK UP | 2014 |
| WP-DAD-3XXX | MAHINDRA,JEETO X7 16 | 2015 |
| WP-DAB-9XXX | MAHINDRA,MAXXIMO PLUS VX | 2015 |
| UP-DAB-1XXX | DFSK,EQ1020DR | 2015 |
| SP-DAA-5XXX | TATA,SUPER ACE | 2015 |
| NC-DAF-2XXX | TATA,SUPER ACE | 2016 |
| WP-DAF-8XXX | MAHINDRA,B M T PLUS MDI | 2017 |
| MOTOR CAR | | |
| 15-2XXX | TOYOTA,CARINA - AT150 | 1984 |
| 14-6XXX | NISSAN,AD WAGON | 1984 |
| 16 SRI 7XXX | TOYOTA,STARLET EP71 | 1986 |
| 15-4XXX | HONDA,CIVIC SEDAN | 1988 |
| 18-5XXX | HONDA,CIVIC | 1988 |
| 17-9XXX | MAZDA,BS 98 GLX | 1990 |
| 17-5XXX | NISSAN,YU12 BLUEBIRD | 1990 |
| 300-1XXX | NISSAN,FB14 | 1994 |
| NC-GE-1XXX | TOYOTA,COROLLA | 1995 |
| 301-7XXX | TOYOTA,COROLLA | 1996 |
| 301-2XXX | DAIHATSU CHARADE | 1996 |
| 300-6XXX | TOYOTA,EL50 | 1998 |
| 302-0XXX | TOYOTA,RAV4 | 1998 |
| WP-GT-4XXX | TOYOTA,VITZ | 1999 |
| WP-HO-9XXX | HONDA,CITY 4A | 2000 |
| NW-JS-5XXX | SUZUKI,GF-GC21S | 2000 |
| WP-JP-6XXX | MAZDA,TA-EPEW JEEP | 2001 |
| WP-HU-9XXX | HYUNDAI,SANTAFE JEEP | 2003 |
| UP-KB-5XXX | HONDA,CIVIC | 2006 |
| WP-KM-6XXX | TOYOTA,DAA NHW20 PRIUS | 2009 |
| WP-KQ-4XXX | NISSAN,DBA SC11 | 2010 |
| SP-KS-6XXX | MARUTI,ZEN ESTILO | 2012 |
| WP-CAJ-7XXX | MICRO,PANDA LC 1.0 | 2015 |
| WP-CAF-6XXX | TATA,NANO TWIST | 2015 |
| WP-CAV-0XXX | TATA,NANO TWIST XTA | 2017 |
| MOTOR COACH | | |
| 61-6XXX | ISUZU,BL36 | 1988 |
| MOTOR LORRY | | |
| WP LF-2XXX | ISUZU,CXZ71J CONCRETE PUMP | 1991 |
| SP-GO-1XXX | MAZDA,BONGO | 1997 |
| WP-HE-0XXX | NISSAN,KG SR4F23 | 1998 |
| CP-LC-2XXX | SUZUKI,LE-DA63T | 2002 |
| SP-HE-5XXX | MITSUBISHI,MINICAB | 2002 |
| NW-JL-7XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2004 |
| CP LB-2XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2006 |
| NP-LC-8XXX | LANKA ASHOK LEYLAND,COMETIPPER | 2006 |
| NP-LK-1XXX | LANKA ASHOK LEYLAND,COMMET TIPPER 1613 | 2010 |
| NW-LH-7XXX | TATA,LPK 1615 | 2010 |
| WP-LI-3XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613 | 2011 |
| WP-LI-8XXX | MITSUBISHI,FE83PC-D6R TIPPER | 2011 |
| NP-LI-1XXX | TATA,LPK 1615 | 2011 |
| WP-LI-7XXX | FAW,CA1040K3E3 1 | 2011 |
| CP-LJ-5XXX | TATA,LPK 1615 | 2012 |
| WP-LK-5XXX | TATA,LPT 709 | 2012 |
| MOTOR VAN | | |
| 50-6XXX | NISSAN,VANETTE | 1983 |
| 50-8XXX | TOYOTA,TOWN ACE | 1983 |
| 52-3XXX | TOYOTA,LITEACE | 1987 |
| 53-6XXX | ISUZU,FARGO | 1988 |
| 53-2XXX | TOYOTA,HIACE | 1988 |
| 52-6XXX | TOYOTA N-LH61VH | 1988 |
| 59-6XXX | NISSAN,SERENA | 1992 |
| 59-5XXX | TOYOTA,HIACE | 1992 |
| 250-8XXX | NISSAN,S-VVJC23 | 1993 |
| CP-PC-1XXX | SUZUKI,EBD DA64V | 2006 |
| EP-PC-2XXX | SUZUKI,EBD-DA64V EVERY | 2007 |
| MOTOR BIKE | | |
| NW-BDK-6XXX | HERO,DASH LX | 2016 |
| NW-BHD-4XXX | YAMAHA,RAY ZR | 2018 |
| THREE WHEELER - PILIYANDALA YARD | | |
| UP-HN-5XXX | BAJAJ,RE DIESEL | 1998 |
| CP-QA-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| WP-QB-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| WP-QG-7XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| SP-QE-3XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QH-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QE-7XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QJ-5XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QI-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QJ-9XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QL-1XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| CP-QK-5XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QL-8XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QO-0XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| SP-QO-9XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QP-1XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| WP-QV-9XXX | BAJAJ,AR4S UG | 2009 |
| WP-QW-2XXX | BAJAJ,AR4S-UG | 2009 |
| SG-QS-2XXX | BAJAJ,AUTO AR4S | 2009 |
| SP-QU-4XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| SP-YC-5XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| CP-YC-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| SG-YA-2XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP-QX-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP-YB-7XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| SG-QZ-5XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| WP-QX-9XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| SG-YC-1XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| SP-QW-5XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| WP-YH-3XXX | TVS,KING | 2010 |
| SP-YL-2XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YL-6XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YV-7XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YR-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SG-YX-3XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-YZ-0XXX | BAJAJ,RE 205 | 2012 |
| NW-AAI-7XXX | BAJAJ,RE 205 | 2013 |
| WP-AAJ-2XXX | BAJAJ,RE 205 | 2013 |
| WP-AAP-9XXX | BAJAJ,RE | 2014 |
| WP-AAT-6XXX | BAJAJ,RE | 2014 |
| CP-AAQ-3XXX | BAJAJ,RE | 2014 |
| WP-AAX-4XXX | BAJAJ,RE 205 | 2015 |
| EP-QZ-5XXX | BAJAJ AR4S-UG | 2010 |
| EP-AAU-4XXX | BAJAJ RE | 2014 |
| THREE WHEELER - DAMBULLA YARD | | |
| NC-HA-2XXX | BAJAJ,BAJAJ AUTO | 2002 |
| NC-QL-3XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| NW-QX-9XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| WP-QH-5XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP-YI-7XXX | BAJAJ,RE 205 | 2010 |
| CP-QH-8XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP-QO-0XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QT-2XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| CP-YC-7XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP-QW-5XXX | BAJAJ,AR4S-UG | 2009 |
| NP-YF-7XXX | BAJAJ,RE 205 | 2010 |
| CP-YO-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| NP-AAU-3XXX | BAJAJ,RE | 2014 |
| NC-AAT-4XXX | BAJAJ,RE | 2014 |
| NW-YD-8XXX | BAJAJ,AR RE 200 | 2010 |
| NC-YX-3XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP-AAP-2XXX | BAJAJ,RE | 2014 |

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2,000 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மிளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மிளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2024 ஜூன் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

AUCTIONEER
Black Tie Service with True Aloha!

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com

www.lankaauction.lk

### நாட்டை பொறுப்பேற்பதாக கூறுவோர் 2025 இல்

# வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை எவ்வாறு ஈடுசெய்வார்கள்?

### நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டுமென்கிறார் - அமைச்சர் பந்துல





நாட்டை பொறுப்பேற்பதாக கூறுவோரிடம் நான் கேட்பது அக்டோபர் மாதம் ஜனாதிபதி நியமிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் வரும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதாக உடன்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்கள் வழங்குவதாக உறுதியளித்துள்ள நிதி இல்லாது வரவுசெலவு திட்டத்தின் துண்டுவிழும்தொகையை எவ்வாறு ஈடுசெய்யப்போகிறார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு விளக்கவேண்டும். இல்லையேல் நாடு முன்பிருந்த நிலைக்கேசெல்லும் என்றும்போக்குவரத்துநெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இபோச. ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்கு அமைவாக உள்வாங்கும்வேலைத்திட்டம்நேற்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

எமது நாட்டில் இலங்கை போக்குவரத்து சபையின் 67 வருட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை தீர்மானிக்கும் நாள் இன்று. இலங்கை வரலாற்றில் இலங்கைப் போக்குவரத்துச் சபை இருக்கும்வரையில் அரசியல் நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவிகளை இழந்த யுகம் அகற்றப்பட்டு, நாளாந்தம் குறிப்பிட்ட வகையில் பதவிகளும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டு வந்த நிலையான அமைப்பாக இ.போ.ச மாற்றப்பட்ட வரலாற்று நாள் இன்று.

முன்பெல்லாம், ஆட்சிகள் மாறும் போது, தேர்தல் முடிந்ததும், வெற்றி பெற்ற கட்சி முதலில் டிப்போவுக்குள் சென்று , தோற்றுப்போன அனைவரையும் நாற்காலியில் இருந்து அகற்றிவிட்டு, புதியவர்கள் அமருவார்கள். அந்தச் செயலுக்கு எதிர்வினையாற்றும் வகையில், அடுத்த முறை வெற்றி பெற்றவுடன், வந்தவர்களை நீக்கிவிட்டு, புதிய குழு நாற்காலிகளில் அமரும். பல்வேறு பதவிகளுக்கு தேவையான பதவி உயர்வுகள் கிடைக்கவில்லை. தகுதி கிடைப்பதில்லை. புதியவர்கள் வருவதற்கு வாய்ப்பே இல்லை. காமினி லொகுகேயின் அழைப்புக்கு அமைச்சர் திலும் அமுனுகமவும் பல்வேறு சூழ்நிலைகளில் இந்நிலைமையை சரி செய்வதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். அந்த முயற்சியில் ஜனாதிபதி எனக்கு இந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பதவியை வழங்கியதன் பின்னர் இந்த நிறுவனத்தைப் பற்றி நாம் சிந்தித்தோம். 1956 இல், இந்த இ.போ.ச உருவானது. அன்றைய உலகில் இருந்த அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க உலகில் இரண்டு முறைகள் இருந்தன. ஒன்று சந்தை அமைப்பு. அமெரிக்கா ஐக்கிய இராச்சியம் , பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் சந்தை முறை மூலம் அந்த சமுதாய மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க வள விநியோக முறை வடிவமைப்பை முடிவு செய்தன சோவியத் ரஷ்யா, மக்கள் சீனா, கியூபா, ஹங்கேரி, பல்கேரியா, உக்ரைன், ருமேனியா போன்ற நாடுகள் மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையில் நடவடிக்கை எடுத்தன. அப்போது பல்கலைக்கழக மட்டத்தில் இவ்விரு முறைகள் பற்றிய விவாதங்களும் நடந்தன. அந்த முறையில் பல்கலைக்கழகங்களில் சிறந்தது சோசலிச மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் அமைப்பே என உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை கற்பிக்க ஒரு சிலர் நடவடிக்கை எடுத்தனர்.அதற்கு மாற்று முறை சந்தை முறை என்றும் கற்பிக்கப்பட்டது. சோசலிச மையப்படுத்தப்பட்ட முறையே சிறந்த அமைப்பு என்பதை இருபத்தைந்து வருடங்களாக சிசிர ஜயக்கொடி எம்.பி.க்களுக்கு நான் கற்பித்துள்ளேன். நாங்களும் கல்லூரியில் படிக்கும் போது அதைத்தான் செய்தோம். தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளை கையகப்படுத்துங்கள். முதலாளித்துவ சக்தி உடைந்தது என கோஷங்களை தலைவர்கள் எங்களுக்கு கற்றுக் கொடுத்தபோது, நாங்கள் வீதிகளில் அவற்றை முழங்கியபடி சென்றிருக்கிறோம்.



அந்த சகாப்தத்தில், பிரதமரின் தந்தை இந்த நாட்டில் சோசலிச இயக்கத்தை நிறுவிய பிலிப் குணவர்தன ஆவார். சவுத் வெஸ்டர்ன் நிறுவனத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பின் படி இலங்கை வரலாற்றில் உழைக்கும் மக்களின் தொழில்சார் போராட்டத்திற்காகப் போராடிய ஒரே இலங்கைத் தலைவர் பிலிப் குணவர்த்தன ஆவார். அவ்வாறு செய்து தேசியமயமாக்கப்பட்ட இயக்கம் 1989 ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு சென்றதன் பின்னரா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் முதலாவதாக இ.போ.ச வே தனியார் மயமாக்கலுக்கு தெரிவானது.

அவ் வேளை பேட்டரி பெட்டியில் அமர்ந்து மத்திய கல்லூரிகள், பல்கலைகழகங்கள் ஊடாக பல்கலைக்கழக மாணவர்களாக, அதிலிருந்து பாராளுமன்றம் வரை வந்த எம்.பி.க்கள் என நுகேகொடை பஸ் நிலையத்தில் தனியார்மயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும் போராட்டத்தை முன்னெடுத்தோம். இ.போ.ச.வை தனியார் மயமாக்க வேண்டாம் என முன்னெடுத்தோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரிச்சர்ட் பத்திரன, அனுர பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்தன மற்றும் நாம் அனைவரும் நுகேகொடயில் வைத்து இ.போ.ச பஸ்ஸில் ஒன்றாக ஏறினோம்.

இ.போ.ச ஊழியர்கள் யாரும் பஸ்ஸை ஓட்ட முன்வரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க பாராளுமன்றத்திற்கு செல்வதற்கான பயணச்சீட்டுகளை வழங்கினார். நாங்கள் சென்றோம்.நானும் அனுர பண்டாரநாயக்கவும் பெட்டரி பெட்டி இருக்கும் இடத்தில் அமர்ந்திருந்தோம். நாங்கள் நுகேகொடையிலிருந்து மிரிஹான நோக்கி சிறிது தூரம் சென்று கொண்டிருந்த போது, மிரிஹானவில் இருந்து இராணுவத்தினர் தடிகளுடன் பஸ்ஸை தாக்க ஆரம்பித்த போது, எமது முன்னாள் உறுப்பினர்கள் பஸ்ஸை முடிந்தளவு வேகமாக எடுத்துக்கொண்டு பாராளுமன்றம் சென்றனர். சபாநாயகரை நோக்கி கூச்சலிட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் எம்மை தாக்கியதாகவும் தெரிவித்தனர்.

அமைச்சர் காமினி லொகுகே அப்போது அமைச்சராக பணியாற்றினார். அது தொடர்பாக பாராளுமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்றார். முடிவு என்னவென்று இன்னும் தெரியவில்லை. இ.போ.ச மூலம் சீசன் டிக்கெட்டுக்கு அரசு பெரும் மானியம் வழங்குகிறது. அதை ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டது. இந்த செலவை செய்து தொழில் நடத்துவது மிகவும் கடினம் என்பது உண்மைதான். ஆனால், இந்த நாட்டில் இலவசக் கல்வி பெறும் இலட்சக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலத்துக்கு அந்த மானியம் மிகவும் முக்கியமானது. பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தனவின் தலைமையில் நாங்கள் உயர் நீதிமன்றத்திற்கு மனு ஒன்றை கொண்டு சென்றோம். உயர்நீதிமன்ற தீர்ப்பின் விளைவாக, பாடசாலை மாணவர்களுக்கு கட்டாயம் சீசன் டிக்கெட் வழங்க வேண்டும் என்ற முடிவை எடுக்க முடிந்தது. இன்றும், இந்த நாட்டில் இ.போ.ச வழங்கும் மிகப் பெரிய சேவைகளில் இதுவும் ஒன்றாகும். தொலைதூர கிராமங்களில் உள்ள குழந்தைகள் பாடசாலை வரவேண்டும் என்ற மிகப்பெரிய தேசிய கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்ற இ.போ.ச டிரைவர் கண்டக்டர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலும், பிள்ளைகளுக்கு முன்பாகவே அதிகாலையில் எழுந்து அம்பாறை, ஆனமடுவ, பஸ்சில் அட்டகலம்பன்ன, நுரைச்சோலை, கொக்கட்டிச்சோலை என நாற்பத்தி நான்கு இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்களை அதிகாலையில் ஏற்றிச் செல்லும் கௌரவமான மனிதாபிமானச் செயலை நாடெங்கிலும் செய்கிறார்கள். அந்தச் சேவையை வேறு யாராலும் செய்ய முடியாது என்பது என் கருத்து. அதற்கான செலவினம் யாரிடமும் இல்லை. போக்குவரத்து கட்டண உயர்வால், சீசன் டிக்கெட்டுகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட செலவு சீசன் டிக்கெட்டுகளுக்கு இருபது பில்லியன் ஆகும். இந்த இருபது பில்லியன் எவ்வளவு பெரியது என்று சொன்னால், 2024ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளுக்குச் வீதி அமைக்க போக்குவரத்து அமைச்சு ஒதுக்கிய தொகை 20 பில்லியன்.

சீசன் டிக்கெட்டுகளை வழங்க இ.போ.ச வுக்கு 20 பில்லியன் தேவைப்படுகிறது. இந்த மானியம் பற்றி எங்கும் பேசப்படுவதில்லை. கொவிட்19 தொற்றுநோய்க்குப் பிறகு, இந்த மானியம் பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டது. இத்தொகையை உடனடியாக செலுத்துமாறு கூறியுள்ளேன். திறைச் சேரி உள்ளிட்ட அரச சேவையில் உச்சத்துக்குச் சென்ற சில அதிகாரிகள், பஸ்ஸில் மத்திய உயர்நிலைப் பள்ளிகள் வழியாக வந்து இலவசக் கல்வி மூலம் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்புக்குப் பிறகு இந்தப் பதவிகளைப் பெற்றதை மறந்துவிட்டார்கள். கடந்த காலங்களில் இ.போ.ச வால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீசன் டிக்கெட்டுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து பணத்தையும் வழங்குவதற்கான பங்கை தங்களுக்கு வழங்குமாறு அன்புடன் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமைச்சராக, பல்வேறு பொறுப்புகளை வகிக்கும் குழுக்களில் நான் பணியாற்றுகிறேன்.ஜனாதிபதியின் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சரவை உபகுழு ஒன்று உள்ளது. வாரத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு புதன்கிழமையும் கூடுகிறது. இந்த அரசாங்கத்தின் அனைத்து ஊழியர் பிரச்சனைகளையும் தீர்க்க பிரதமர் தலைமையில் ஒரு நிறுவன துணைக்குழு உள்ளது. ஊழியர்களின் சம்பளம், ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவற்றில் அமைச்சரவைச் செயலாளர், பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சகத்தின் முகாமைத்துவ திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளையும் கொண்ட குழு. நானும் அதில் உறுப்பினராகப் பணியாற்றி வருகிறேன். 2018ஆம் ஆண்டிலிருந்து காமினி லொகுகே அமைச்சர்களான திலும் அமுனுகம, தலைவர், அமைச்சின் செயலாளர் என்ற வகையில் அரசாங்க அதிகாரி என்ற ரீதியில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். தினமும் கலந்துரையாடுவார்கள். புதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்த அதிகாரிகளும் இந்த குழுவில் உள்ளனர். இ.போ.சவின் பல்வேறு ஆண்டு விழாக்களில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதாக கூறப்படுகிறது. மிக மோசமான முறையில், சட்டப்பூர்வ அனுமதியின்றி, இந்த சம்பளத்திற்கு தற்காலிக கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வு கிடைக்கும் வரை என்னால் வேலை செய்ய முடியாது, ஆனால் நான் என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன், ஏனென்றால் இது கடைசி விஷயம் அல்ல, ஏனெனில் இந்த குழு தலைவர் இந்தக் குழு கூடியபோது, நான் உறுப்பினராக வந்து அனைவரின் பிரச்சினைகளையும் தீர்ப்பேன் என்று பிரதமர் கூறினார்.

ஒவ்வொரு நாளும் தலையிடும் ஒருவர் என்ற முறையில், எனது அமைச்சின் இ.போ.ச வில் உள்ள இந்த மனிதாபிமான பிரச்சினை ஒரு முன்னுதாரணமாக இருக்கும் வகையில் தற்போதுள்ள வழிமுறைகளை மாற்றி நிறைவேற்றாத வரையில் நான் இந்த அமைச்சரவை உப குழுவிற்கு வரமாட்டேன் என்று எழுந்து சென்றேன். பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க விசேட குழுவொன்றை உருவாக்கி பரிந்துரையை முன்வைத்தார். அந்த பரிந்துரைகள் குறித்து பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன, ஆனால் அந்த கமிட்டியின் அதிகாரியொருவர் வெளிநாட்டுக்கு சென்றிருந்தார்.. தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களும் உள்ளே உள்ள போராட்டத்தை புரிந்து கொள்ளவில்லை.

இன்றிலிருந்து நிரந்தரப் பொறுப்பும் பதவியும் கிடைக்கும், அதன்படி தங்களுடைய கடமையை நிறைவேற்றினால் சரியான முறையில் பதவி உயர்வு கிடைக்கும் முறை ஒன்று தயாரித்து அளித்ததன் பின்னால், எஞ்சிய அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றி, தங்களுடைய சேவையை வழங்கும் பொது நிறுவனமாகத் தொடர்ந்து இயங்கும் பொறுப்பு உங்களுக்கு வழங்கப்படும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

## கிழக்கின் குரல்



# மட்டு பொது நூலக கட்டுமான பணிகளை விரைவுபடுத்தி மக்கள் பாவனைக்கு கையளிக்க ஆராய்வு





**மட்டக்களப்பு நிருபர்**

பிரதமர் தினேஷ் குணவர் தன மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் ஆகியோர் தலைமையிலான உயர்மட்ட கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் கட்டுமான பணிகளை விரைவு படுத்தி நிறைவு செய்வதற்கான மேலதிக நிதி ஒதுக்கீடு மற்றும் அமைச்சரவையில் விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தல், வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது ஏற்படுகின்ற இடையூறுகளை கையாள்வதற்கான பொறிமுறைமைகள் போன்றன தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது. இவ் விசேட கலந்துரையாடல் நாட்டின் பிரதமரும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சருமான தினேஷ் குணவர்தன மற்றும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் ஆகியோர் தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த நூலகத்தின் பணிகளை முழுமையாக முடிவுறுத்தி மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலுமான முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பிரதமர் குறிப்பிட்டிருந்தார். கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் தூரநோக்கு சிந்தனைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அடையாளச் சின்னமாகவும், ஆசியாவின் பிரமாண்டங்களுள் ஒன்றாகவும் மிளிரவிருக்கும் மட்டக்களப்பு பொது நூலகத்தின் கட்டுமான பணிகளானது கடந்த காலங்களில் நிலவிய கசப்பான அரசியல் பழிவாங்கல்கள், மற்றும் அரசியல் ரீதியான குரோத செயற்பாடுகள் காரணமாகவும் தொடர் இழுபறி நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது.

இக் கலந்துரையாடலில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளர் மாணிக்கவாசகர் தயாபரன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எந்திரி சிவலிங்கம், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட கட்டிட திணைக்கள உயர் அதிகாரிகள், துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 100 மணித்தியால சிங்கள பாடநெறி



**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரச மொழிகள் திணைக்களத்தினால் ஆரம்பதர அரச உத்தியோகத்தர்களுக்கான பாடநெறி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் PTM.இர்பானின் அவர்களின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி F.நஹீஜா முஷாபிரின் தலைமையில் விடயத்துக்கு பொறுப்பான தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் AMM. றிஸானின் நெறிப்படுத்தலில் மாவட்ட தேசிய மொழிகள் அபிவிருத்தி இணைப்பாளர் F.பிரதீஸ்கரன் நிருவாக உத்தியோகத்தர் KB.சலீம் கிராம நிருவாக உத்தியோகத்தர் AL.ஜஃபர் நிருவாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் MAC. றியானா திட்டமிட்டல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் Mrs.ஜெயந்தி பரமநிதி விடயத்துக்கு பொறுப்பான ஆசிரியர் MM பாசில் மற்றும் பிரதேச செயலக, வைத்தியசாலை மற்றும் பிரதேச சபை போன்ற நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆரம்பதர உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.








## தந்தை செல்வா ஞாபகார்த்த விருது வழங்கும் விழா

தந்தை செல்வா நற்பணி மன்றம் வருடாந்தம் நடத்தும் தந்தை செல்வா ஞாபகார்த்த விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றபோது தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டோரை படத்தில் காணலாம்.

## ரிச்மண்ட்டியின் மில்லியம் குரூப்பின் வருடாந்த ஒன்றுகூடல்

9. Bids must be delivered to the **Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa** at or before **15:00 hrs on 01.07.2024.** Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address mentioned at **15:00 hrs on 01.07.2024.**
10. Complete bids should be separately forwarded in two copies as original and duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as 'original' and 'duplicate' respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee (Minor), Eastern Province,**
**Agriculture Sector Modernization Project,**
**Agriculture Quarters Lane, Kallady, Batticaloa,**

Date: 10.06.2024

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் புதிய பெயர்:**
லங்காதீப ப்ரொபர்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் முந்தைய பெயர்:**
ஃபோ-யுவர்-நீட் (பீவீம) எல்டீடி

**பதிவு இல : பீவீ 00200770**

**பதிவு முகவரி:**
இல. 51, டீன்ஸ்டன் பிளேஸ், கொள்ளுபிட்டி, கொழும்பு 3.

நடைமுறைக்கு வரும் திகதி: 08.04.2024

கம்பனி செயலாளர்கள்,
எக்மி கொம்செக் (பிரைவட்) லிமிட்டெட்

## பெயர் மாற்றம்

கொழும்பு -09, மஹவெல லேன், இல. 150/14Aஐச் சேர்ந்த **கருப்பன்னன் பாலசன்முகம் விமல தர்ஷனி** ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை **K.B. ஹாஜரா** என மாற்றம் செய்கிறேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குயரசுக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.B. ஹாஜரா**

## அறிவித்தல்

ஊவா பரனகம பிரதேச சபையின் 2025ம் ஆண்டின் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகள் 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன்பு எனக்கு சமர்ப்பிக்குமாறு பிரஜைகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**எஸ்.எச்.எம். பிசோமெனிக்கே,**
**சபை செயலாளர்,**
**ஊவா பரனகம பிரதேச சபை,**
**அம்பகஸ்தோவ.**
2024.06.05.ம் திகதி

## கேள்விகோரல் அறிவித்தல்

### பொல்கஹவெல பிரதேச சபையின் பொல்கஹவெல மற்றும் பொத்துஹெர பொது விற்பனை நிலைய கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்.

பொல்கஹவெல பொது விற்பனை நிலைய கட்டிடத்தொகுதியின் இல. 65,66,67,69 என்ற கடை அறைகள் மற்றும் பொத்துஹெர பொது சந்தை கட்டிடத்தொகுதியின் இல. 02 கடை அறையை 03 வருடங்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கு பொல்கஹவெல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடமிருந்து 2024.06.13 முதல் 2024.07.04 வரை கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்கஹவெல**

நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொ.பே.இலக்கங்களில் மற்றும் அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளலாம்.

037 - 2243274, 037 - 2243275

### சிவில் வழக்கு கட்டளைகள் கோவை சட்டத்தின் 16வது அத்தியாயத்தின் கீழான அறிவித்தல்

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல**. DSP/259/2024
**தன்மை:** விசேடம்
**நடைமுறை:** சாதாரணம்
**பெறுமதி:** ரூபா 4,000,000.00

**1. லசந்த அலகியவன்ன,**
**மீவிட்டிகம்மன, ஊராபொல.**

**முறைப்பாட்டாளர்கள்**

**எதிராக:**

1. சரத் ஏக்கநாயக்க,
610, ஜனசவிகம, குண்டசாலை,
பல்லேகலை

**மற்றும்**

35, கடவத்த வீதி,
களுபோவில.

2. ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ,
இல. 17, விஜயபா மாவத்தை,
நாவல வீதி, நுகேகொட.

3. கீர்த்தி உடவத்த,
இல. 30, கிறீன்லேன்ட் மாவத்தை,
நெதிமால, தெஹிவளை.

4. நிமல் சிறிபால டி சில்வா,
பதில் தலைவர்,
இலங்கை சுதந்திரக் கட்சி,
301, டீ.பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
மற்றைய வதிவிடம்
93/20, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-08.

5. துமிந்த திசாநாயக்க
பதில் பிரதான செயலாளர் மற்றும்
தேசிய அமைப்பாளர்,
இலங்கை சுதந்திரக் கட்சி,
301, டீ.பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

மற்றைய வதிவிடம்
56, ஸ்கெல்டன் வீதி, கொழும்பு 05.

6. மஹிந்த அமரவீர,
சிரேஷ்ட உப தலைவர்,
இலங்கை சுதந்திரக் கட்சி,
301, டீ.பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

மற்றைய வதிவிடம்
B63, மஹகமசேகர மாவத்தை,
பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.

7. மைத்திரிபால சிறிசேன,
நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மற்றும் / அல்லது ஆதரவாளர்,
இலங்கை சுதந்திரக் கட்சி,
முன்னாள் ஜனாதிபதி உத்தியோகபூர்வ விடுதி,
இல. 79/C, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 07.

8. சாரதி துஷ்மன்ன மித்ரபால,
நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்,
இலங்கை சுதந்திரக் கட்சி,
528, கரவனெல்ல, ருவன்வெல்ல.

**பிரதிவாதிகள்**

கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சியை பிரதி நித்துவப்படுத்துவதற்காக மற்றும் அந்தக் கட்சியின் சார்பில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளரினால் பின்வரும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கூறிய இலக்கத்தைக் கொண்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**மேற்கூறிய நிவாரணமானது:**

i. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும் அதன் சார்பில் சிவில் வழக்கு கட்டளைகள் கோவையின் 16வது அத்தியாயத்தின் கீழ் 4வது மற்றும்/அல்லது 5வது மற்றும்/அல்லது 6வது மற்றும்∴அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிகளுக்கு வழக்கு தொடர்வதற்கான கட்டளையை வழங்குமாறும்,

ii. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது பரிந்துரைப்பதற்கு 2ஆம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

iii. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

iv. இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி நிலையில் நியமிக்கப்பட்டதாக பரிந்துரை செய்வதற்கு மற்றும்/அல்லது பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2ஆம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

v. இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவிநிலையில் நியமிக்கப்பட்டதாக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்∴அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்∴அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

vi. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் மற்றும்∴அல்லது தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கு இயைபான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்வதற்கு இயலுமை உண்டென பரிந்துரைப்பதற்கு 2வது பிரதிவாதிக்கு உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

vii. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டம் சட்டப்படி செல்லுபடியற்ற கூட்டமொன்று எனவும் மற்றும்/அல்லது வழமையாக நடாத்தப்படும் கூட்டம் அல்ல என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

viii. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக 2ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானம் மற்றும் அந்தத் தீர்மானத்திற்கு இணைவான ஏனைய சகல தீர்மானங்களும் சட்டப்படி வலுவிழந்த மற்றும் / அல்லது வலுவற்ற மற்றும் / அல்லது வழமையாக எடுக்கப்படாத தீர்மானம் என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

ix. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக 3ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானம் மற்றும் அந்தத் தீர்மானத்திற்கு இணைவான ஏனைய சகல தீர்மானங்களும் சட்டப்படி வலுவிழந்த மற்றும் / அல்லது வலுவற்ற மற்றும் / அல்லது வழமையாக எடுக்கப்படாத தீர்மானம் என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

x. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களும் சட்டப்படி வலுவிழந்த மற்றும் / அல்லது வலுவற்ற மற்றும் / அல்லது வழமையாக எடுக்கப்படாத தீர்மானம் என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

xi. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக 2ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 2ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

xii. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக 3ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 3ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்∴அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

xiii. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளரான 5ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

xiv. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக 4ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதற்கு 1வது மற்றும்∴அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவருக்கும் அதிகாரம் மற்றும்/அல்லது உரிமை இல்லை என பிரகடனமொன்றை வழங்குமாறும்,

xv. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களையும் இரத்துச் செய்து கட்டளையொன்றை வழங்குமாறும்,

xvi. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது பரிந்துரைப்பதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xvii. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xviii. இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி நிலையில் நியமிக்கப்பட்டதாக பரிந்துரை செய்வதற்கு மற்றும்/அல்லது பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xix. இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி நிலையில் நியமிக்கப்பட்டவராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xx. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் மற்றும்/அல்லது தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கு இயைபான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்வதற்கு இயலுமை உண்டென பரிந்துரைக்க 2வது பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxi. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக 2ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 2ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxii. 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக 3ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 3ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxiii. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளரான 5ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் நிரந்தர இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxiv. இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக 4ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxv. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது பரிந்துரைப்பதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxvi. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxvii. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி நிலையில் நியமிக்கப்பட்டதாக பரிந்துரை செய்வதற்கு மற்றும்∴அல்லது பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxviii. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி நிலையில் நியமிக்கப்பட்டவராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxix. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் மற்றும்/அல்லது தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கு இயைபான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்வதற்கு இயலுமை உண்டென பரிந்துரைக்க 2வது பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxx. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக 2ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 2ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxxi. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக 3ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 3ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxxii. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளரான 5ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ய 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxxiii. இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக 4ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ய 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் இடைக்கால இன்ஜெக்ஷன் தடையொன்றை வழங்குமாறும்,

xxxiv. இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது பரிந்துரைப்பதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxxv. இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் சாசனத்தில் காட்டப்பட்டுள்ள அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் வரை அந்தக் கட்சியின் அங்கத்தவராக மற்றும்/அல்லது உத்தியோகத்தராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது பரிந்துரைப்பதற்கு 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxxvi. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவிநிலையில் நியமிக்கப்பட்டதாக பரிந்துரை செய்வதற்கு மற்றும்/அல்லது பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2ஆம் பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxxvii. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற அங்கத்தவரொருவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவிநிலையில் நியமிக்கப்பட்டவராக 2ஆம் பிரதிவாதியை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு 1வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxxviii. இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் மற்றும்/அல்லது தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கு இயைபான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செய்வதற்கு இயலுமை உண்டென பரிந்துரைக்க 2வது பிரதிவாதியைத் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xxxix. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக 2ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 2ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xl. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை 2024 மே மாதம் 12ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளராக 3ஆம் பிரதிவாதியை நியமித்து எடுக்கப்பட்ட உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மற்றும் / அல்லது 3ஆம் பிரதிவாதியை இலங்கைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக பரிந்துரைப்பதற்கு 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xli. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் பிரதான செயலாளரான 5ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ய 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xlii. இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை இலங்கை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக 4ஆம் பிரதிவாதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ய 1வது மற்றும்/அல்லது 2வது மற்றும்/அல்லது 3வது மற்றும்/அல்லது 7வது மற்றும்/அல்லது 8வது பிரதிவாதிக்கு மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சிக்கு மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது அவர்களின் முகவர்களுக்கு மற்றும்/அல்லது பிரதிநிதிகளுக்கு மற்றும்/அல்லது ஊழியர்களுக்கு மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை வழங்குமாறும்,

xliii. வழக்கு கட்டணங்களை வழங்குமாறும்

இந்த கௌரவ நீதிமன்றத்திற்கு நன்மை எனத் தோன்றும் ஏனைய மற்றும் மேலதிக நிவாரணங்களைப் பெற்றுத்தருமாறும்,

மேற்கூறப்பட்ட பெயரையுடைய முறைப்பாட்டாளரால் மேற்கூறப்பட்ட இலக்கத்தைக் கொண்ட வழக்கு தொடரப்பட்டுள்ளதானது கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் மற்றும் மேற்கூறிய கட்சி உடையும் என்பதால் இது தொடர்பில் ஆர்வமுள்ள சகலரும் அறிந்து கொள்ளும் பொருட்டு மேற்கூறிய வழக்கு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மற்றும் அந்தக் கட்சியின் சார்பாக அதன் அங்கத்தவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த வழக்கு தொடர்பான பகிரங்க அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்கு கௌரவ நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அந்தக் கட்டளையின் பிரகாரம் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அந்தக் கட்சியின் சார்பில் மற்றும் அதன் அங்கத்தவர்கள் அறிந்து கொள்வதற்காக இந்த அறிவித்தல் இவ்வாறு பிரசுரிக்கப்படுகின்றது. அடுத்த வழக்கு நாள் 2024ஆம் வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதியாகும் என மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2024ஆம் வருடம் 06ஆம் மாதம் 05ஆம் திகதி.

**நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம்,**

**பதிவாளர் / பிரதி பிஸ்கால்,**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,**
**கொழும்பு-12.**

## வலய சம்பியனானது பாலமுனை மின்ஹாஜ்

*ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்*

அக்கரைப்பற்று கல்வி வலயமட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய அணி அக்கரைப்பற்று வலயமட்ட சம்பியனாகியது.



பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் (05) இடம்பெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான வலய மட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று அஸ்–ஸிறாஜ் மகா வித்தியாலய அணியை 4–3 என்ற கோல்கள் அடிப்படையில் பாலமுனை மின்ஹாஜ் அணி வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# புரூணையிடம் இலங்கைக்கு நட்புறவு போட்டியில் தோல்வி

புரூணை அணிக்கு எதிரான முதலாவது நட்புறவு கால்பந்து போட்டியில் இலங்கை அணி 0–1 என தோல்வியை சந்தித்தது.

புரூணை சென்றிருக்கும் இலங்கை அணி ஆடும் இரு நட்புறவு போட்டிகளில் முதல் போட்டி நேற்று முன்தினம் ஹசன் பொல்கியா சர்வதேச மைதானத்தில் (08) நடைபெற்றது.

முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல் புகுத்த முடியாமல்போனது.

எனினும் போட்டியின் இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் புகுத்த கடுமையாக போராடின. இதன்போது புரூணை அணித்தலைவர் அலி ரஹ்மான் 59 ஆவது நிமிடத்தில் புகுத்திய கோல் அந்த அணியின் வெற்றி கோலாக அமைந்தது.

போட்டியின் கடைசி நேரத்தில் இலங்கை அணி பயிற்சியாளர் அன்டி மொரிஸ் பதில் வீரர் ஒருவரை களமிறக்கிய நிலையில் இலங்கை அணி வீரர்கள் பதில் கோல் ஒன்றை திருப்ப கடுமையாகப் போராடியபோதும் அது வெற்றியளிக்கவில்லை. இரு அணிகளும் ஆடும் இரண்டாவது நட்புறவுப் போட்டி நாளை (11) அதே ஹசன் பொல்கியா சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# மேற்கிந்திய தீவுகளுக்கு 134 ஓட்டங்களால் வெற்றி



உகண்டா அணிக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சி குழுவுக்கான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 134 ஓட்டங்களால் இமாலய வெற்றி ஒன்றை பெற்றது.

புரோவிடன்ஸில் இலங்கை நேரப்படி நேற்று (09) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது. ஜோன்சன் சார்ல்ஸ் 42 பந்துகளில் 44 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய உகண்டா அணி 12 ஓவர்களில் 39 ஓட்டங்களுக்கே சுருண்டது. அந்த அணியில் ஒருவர் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டத்தை பெற்றார். இது உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அணி ஒன்று பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் என்ற சாதனையையும் சமன் செய்வதாக அமைந்தது. முன்னதாக 2014 இல் இலங்கைக்கு எதிராக நெதர்லாந்து அணி 39 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் அகீல் ஹொஸைை ஐந்து விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னதாக பி குழுவுக்காக நடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆஸி. அணி 36 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. தவிர நெதர்லாந்து அணியை தென்னாபிக்க அணி 4 விக்கெட்டுகளால் போராடி வீழ்த்தியது.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் 4 பணயக்கைதிகளை மீட்ட இஸ்ரேலின் தாக்குதலில் 274 பேர் பலி

## பலஸ்தீனர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை 37 ஆயிரத்தை தாண்டியது

மத்திய காசாவின் அல் நுஸைரத் அகதி முகாமில் கடந்த சனிக்கிழமை (08) பட்டப்பகலில் அமெரிக்காவின் உதவியோடு நான்கு பணயக்கைதிகளை விடுவித்த இஸ்ரேலின் கடுமையான படை நடவடிக்கையின்போது 200க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க தரப்பினர் இந்த இராணுவ நடவடிக்கைக்கு உதவியதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதில் அமெரிக்கா உளவு மற்றும் மற்ற உதவிகளை வழங்கியதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேலிய படைக்கும் இடையே அண்மைய நாட்களாக உக்கிர மோதல் இடம்பெற்று வரும் சனநெரிசல் மிக்க அல் நுஸைரத்தில் இஸ்ரேலின் கடுமையான வான் தாக்குதல்களுடனேயே இந்த பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கை இடம்பெற்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

நுஸைரத்தில் உள்ள குடியிருப்புப் பகுதியில் ஹமாஸினால் பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு வெவ்வேறு அடுக்குமாடி கட்டடங்களிலேயே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கையின்போது இஸ்ரேலிய படையினர் கடும் தாக்குதலுக்கு இலக்கானதோடு பதில் நடவடிக்கையாக வான் மற்றும் தரை வழியாக தாக்குதல் நடத்தப்பட்டது என்று இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டனியேல் ஹகரி தெரிவித்துள்ளார்.

'100க்கும் குறைவான (பலஸ்தீனர்களின்) உயிரிழப்புகள் பற்றி எமக்குத் தெரியும்;. அவர்களில் எத்தனை பேர் பயங்கரவாதிகள் என்பது எனக்குத் தெரியவில்லை“ என்றும் செய்தியாளர் சந்திப்பில் ஹகரி குறிப்பிட்டார்.

இந்தப் படை நடவடிக்கையின்போது இஸ்ரேலிய சிறப்புப் படை கொமாண்டர் ஒருவர் கொல்லப்பட்டதாக பொலிஸ் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 274 பேர் கொல்லப்பட்டு 698 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசா மீது நடத்தி வரும் இஸ்ரேலிய தாக்குதல்களில் ஒற்றை சம்பவத்தில் அதிகமானோர் கொல்லப்பட்ட தாக்குதலாக இது உள்ளது.

கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டிருப்பதை பலஸ்தீன சுகாதார அமைச்சு உறுதி செய்துள்ளது.

இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

'ஆக்கிரமிப்பாளர்கள் நுஸைரத் அகதி முகாமை அழித்துவிட்டனர். அப்பாவிகள் மற்றும் நிராயுதபாணிகளான பொதுமக்களின் வீடுகள் மீது குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இது போன்று நான் இதற்கு முன் கண்டதில்லை. இது ஒரு பேரழிவு' என்று உள்ளூர் குடியிருப்பாளரான நிதால் அப்தே, மிடில் ஈஸ்ட் ஐ செய்தி தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

'நான் முகாமில் இருந்து மருத்துவமனைக்கு கால்நடையாக வந்தேன். நாம் எப்படி தப்பி வந்தோம் என்பதை என்னால் விபரிக்க முடியாது. நாம் தப்பி வரும் இடங்கள் எல்லாம் இறந்த குழந்தைகள் மற்றும் உடல் பாகங்கள் சிதறிக்கிடந்தன. அவர்களுக்கு உதவ யாரும் இருக்கவில்லை. தள்ளு வண்டி ஒன்றில் வயதான ஒருவர் இறந்து கிடப்பதையும் நான் பார்த்தேன்.

நுஸைரத் அழிக்கப்பட்டிருந்தது. அது நரகமாக இருந்தது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்தல் சலாம் தார்விஷ் என்பவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு கூறும்போது, தாம் மரக்கறி வாங்குவதற்கு சந்தைக்கு வந்திருந்த நேரம் வானில் போர் விமானங்கள் மற்றும் துப்பாக்கிச் சத்தமும் கேட்க ஆரம்பித்ததாக தெரிவித்துள்ளார்.

'இதன் பின் துண்டு துண்டாக உடல்கள் சிதறிக் கிடந்ததாகவும் சுவர்களில் இரத்தக் கறை படிந்திருந்ததை கண்டேன்' என்றும் கூறியுள்ளார்.

இந்த தாக்குதில் 26 வயதான நோவா அர்கமானி, 22 வயது அல்மொக் மீர் ஜா, 27 வயது அட்ரே கொஸ்லோவ் மற்றும் 42 வயது ஷலோம் சீவ் ஆகிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது இவர்கள் அனைவரும் நோவா இசை விழாவில் பங்கேற்றிருந்தபோது கடத்திச் செல்லப்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக்குதலின்போது தமது பிடியில் இருந்த சில இஸ்ரேலிய பணயக்கைதிகள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் இராணுவப் பேச்சாளர் அபூ ஒபைதா தெரிவித்துள்ளார். பணயக்கைதிகளை விடுவித்ததாக இஸ்ரேல் கூறுவதன் மூலம் காசாவில் இஸ்ரேலின் மூலோபாய தோல்வி நிலை மாறாது என்று ஹமாஸ் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 தாக்குதலின்போது சுமார் 251 பணயக்கைதிகள் பலஸ்தீன போராளிகளால் பிடிக்கப்பட்ட நிலையில் நவம்பரில் இடம்பெற்ற ஒரு வாரம் போர் நிறுத்தத்தின்போது 100 பணயக்கைதிகள் வரை விடுவிக்கப்பட்டனர். மேலும் 116 பணயக்கைதிகள் காசாவில் இருப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டபோதும் அதில் 40 பேர் வரை ஏற்கனவே உயிரிழந்திருப்பதாக அது நம்புகிறது. பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதை வரவேற்றிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் 200க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டது குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

'எட்டு மாதங்கள் பிடியில் இருந்த நான்கு பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதை வரவேற்கிறோம். கடைசியாக அவர்கள் தமது குடும்பத்தினருடன் சேர்க்கப்பட்டுள்ளனர். அனைத்து பணயக்கைதிகளும் வீடு திரும்பும் வரை அமெரிக்கா ஓயாது' என்று பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் நுஸைரத் அகதி முகாம் மீதான இஸ்ரேலின் தாக்குதலை ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாக கண்டிக்கிறது என்று அதன் வெளியுறவு கொள்கைகளுக்கான தலைவர் ஜேசெப் பொரெல் தெரிவித்துள்ளார்.

'இரத்த ஆறு உடன் நிறுத்தப்பட வேண்டும்' என்று கூறிய அவர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒரு வாரத்துக்கு முன்னர் வெளியிட்ட மூன்று கட்ட போர் நிறுத்த திட்டம், 'நீடித்த போர் நிறுத்தம் மற்றும் கொலைகளை முடிவுக்குக் கொண்டு வர வழிவகுக்கும்' என்றும் வலியுறுத்தினர்.

இந்தப் போர் நிறுத்தத் திட்டத்தை ஏற்கும்படி ஹமாஸை பிளிங்கன் வலியுறுத்தி இருந்தார். எனினும் ஹமாஸின் ஆட்சியை ஏற்கும் எந்த ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையையும் ஏற்கப்போவதில்லை என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் மற்றும் ஏனைய இஸ்ரேலிய உயர்மட்ட அதிகாரிகள் குறிப்பிட்டு வருகின்றனர்.

இஸ்ரேலின் இந்த நிபந்தனை பற்றி குறிப்பிடாத பிளிங்கன் தனது அறிக்கையில், 'இந்தப் போர் நிறுத்தத்தை அடைவதற்கு ஹமாஸ் மாத்திரமே ஒரே தடையாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

காசாவின் மத்திய பகுதி மற்றும் ரபா நகரில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தீவிரமாக இருந்தன. புரைஜ் அகதி முகாமில் உள்ள அபூ அல் காஸ் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமாக வபா குறிப்பிட்டது.

இதே காலத்தில் ராபில் உள்ள டெல் அல் சுல்தான் பகுதியில் நடத்திய செல் குண்டு தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 283 பேர் கொல்லப்பட்டு மேலும் 814 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நுஸைரத் அகதி முகாம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்டவர்களே அதிகப் பெரும்பான்மையாக உள்ளனர்.

காசாவில் எட்டு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதல்களி;ல் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,084 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 84,494 பேர் காயமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# பெண்ணை முழுமையாக விழுங்கிய மலைப்பாம்பு

இந்தோனேசியாவில் மலைப்பாம்பினால் முழுமையாக விழுங்கப்பட்ட பெண் ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

கலெம்பாங் கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை (6) இரவு காணாமற்போன 45 வயது பரிடாவைத் தேடும் பணிகள் மும்முரமாக நடைபெற்றன. 5 மீற்றர் நீளங்கொண்ட மலைப்பாம்பின் வயிற்றில் அவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

பரிடாவின் உடைமைகளை அவரது கணவர் கண்டுபிடித்தார். அதே பகுதியில் பெரிய வயிறு கொண்ட மலைப்பாம்பு தென்பட்டது. மலைப்பாம்பின் வயிற்றைக் கிழித்துப் பார்க்க அனைவரும் முடிவெடுத்தனர்.

அதில் பரிடா முழு ஆடைகளுடன் காணப்பட்டார். அவருக்கு 4 பிள்ளைகள் இருக்கின்றனர்.

அத்தகைய சம்பவங்கள் அரிதானவை என்றாலும் மலைப்பாம்புகள் மனிதர்களை முழுமையாக விழுங்கும் சம்பவங்கள் இந்தோனேசியாவில் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.



# வட கொரியாவுக்கு எதிராக தெற்கு ஒலிபெருக்கி பிரசாரம்

வட கொரியா குப்பைகளை நிரப்பிய பலூன்களை தென் கொரியாவுக்கு அனுப்பி வரும் நிலையில் ஆறு ஆண்டுகளின் பின் வட கொரியாவுக்கு எதிரான பிரசார ஒலிபரப்பை ஆரம்பிக்கப்போவதாக தென் கொரியா அறிவித்துள்ளது.

வட கொரியாவின் 300 இற்கும் அதிகமான குப்பை பலூன்கள் கடந்த இரண்டு தினங்களில் தென் கொரியாவில் அவதானிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வட கொரிய எல்லையை ஒட்டி ஒலி பெருக்கியை பயன்படுத்திய பிரசாரத்தையே தென் கொரியா ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளது.

இது ஒரு போர் செயல் என்றும் குண்டு வைத்து தகர்ப்பதாகவும் வட கொரிய கடந்த காலத்தில் எச்சரித்து வந்தது. எனினும் தற்போதைய அறிவிப்புப் பற்றி வட கொரிய இன்னும் எந்த பதிலையும் வெளியிடவில்லை.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.